# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஆனிமாதம் 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 24-ம் இலக்கம்


# இலங்கை மக்களே, எச்சரிக்கை!

## கம்மிகள் குலவுகின்றனர் — உங்கள் சூரல்வளையை நசுக்க!

— சுவாமி மரியருள் தம்புராஜ் —

இலங்கை என்றாலே இன்பத் தேனாக இருக்கிறது இன்று பல கம்யூனிஸ்டு நாடுகளுக்கு. இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்தியாவுக்குப் படையெடுத்தனரே பல தூதுக்குழுக்கள், அதைப்போன்றே இன்று கம்யூனிஸ்டு நாடுகளிலிருந்து அடுத்தடுத்து வணிகத் தூதுக்குழு, பண்பாட்டுத் தூதுக்குழு என்று பல குழுக்கள் இலங்கைக்கு வருகின்றனர். யூகோஸ்லாவியா, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லாவாக்கியா முதலிய நாடுகளிலிருந்து குழுக்கள் வந்து சென்றன. சிவப்பர்களுக்கு இத் திடீர் மயக்கம் வந்ததேன் எனச் சிந்தனையாளர் சிந்திக்கவேண்டும்.

புரட்சியின்றி, அமைதியாக அரசாங்கத்தை ஊடுருவி, கம்யூனிச இராட்சதப் பிடிப்பைப் புகுத்த இதுவே தருணம் என்ற எண்ணமே இந்தக் குலவுதலுக்குக் காரணம். உலகமெங்கும் மார்க்சிய அடக்கு முறையைத் திணித்து, எத்தர்களின் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டுவதே ருஷியாவின் ஒரே நோக்கம். இதற்காகச் சமயத்திற்கேற்பப் "போற்றினும் போற்றுவர், தூற்றினும் தூற்றுவர்." எத்தகைய சூழ்நிலையையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் பச்சோந்தியையும் மிஞ்சியவர்கள் கம்யூனிஸ்டு சந்தர்ப்பவாதிகள்.

இதையெல்லாம் மனதில் கொண்டே, மே 26-ல் புவனேசுவரத்தில் பேசிய நேருஜி, கம்யூனிஸ்டுகளின் துரோகப் போக்கைத் தோலுரித்துக் காட்டினார். இந்தியாவுக்குச் சீனாவிடமிருந்து இன்னும் ஆபத்து இருந்துகொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டு, "எல்லைப் பிரச்சினையில் சீனாவையே கம்யூனிஸ்டுக்கட்சி ஆதரிக்கிறது. ஓர் இந்தியன் இவ்வாறு நடந்துகொள்வது வியப்பிலும் வியப்பே!" என்றார். "விஜயவாடாவில் கூடிய இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மாநாட்டில் ஒருசிலர் இந்தியாவைச் சற்று ஆதரிப்பது போலப் பேசினார்கள்; மற்றவர்கள் எல்லாம் முழுக்க முழுக்கச் சீனாவையே ஆதரித்தார்கள். கம்யூனிஸ்டுகள் இந்திய மண்ணில் வேர்விடவில்லை; மற்ற நாடுகளுக்கே விசுவாசமாயிருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. அந்த நாடுகள் செய்வதெல்லாமே அவர்களுக்கு நல்லதாய் இருக்கிறது" என அப்பட்டமாகக் கூறிவிட்டார். கம்யூனிஸம் என்றால் என்ன என்பதை அறியாதவர் அல்லர் நேருஜி.

இரகசியமாகத் துரோகச் செயல்களில் ஈடுபட்டிருந்த சில சீனர்களை அண்மையில் நம் நாடு நாடு கடத்தியது. கம்யூனிஸ்டு மாநாட்டிற்கு வர விரும்பிய பல பிரதிநிதிகளுக்கு இந்திய அரசு நுழைவுச் சீட்டுத்தர மறுத்தது. கம்யூனிஸ்டு சிவப்பு விளக்கின் பேராபத்தை நம் நாடு உணரத் தொடங்கியதால், இந்த எச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்கியது.

இலங்கையிலோ, ஒவ்வொரு தேசியத் திட்டத்திலும் ருஷியா அமோக அக்கறை காட்டுகிறது. திரிகோணமலைத் துறைமுகத்திற்கு ருஷிய எண்ணெய்க் கப்பல்கள் வருகின்றன. கீழ்நாட்டுப் பாதுகாப்பிற்குக் கருவிழி போன்றது திரிகோணமலை. அங்கு ருஷியக் கப்பல்கள் நடமாடுவது விரும்பத்தக்கதுதானா?

இலங்கை வீழ்ந்தால், இந்தியாவுக்கு ஆபத்து! இலங்கை சிறந்தால் இந்தியாவும் சிறக்கும். இலங்கையில் வாழ்பவர் முற்றும் அன்னியர் அல்லர். தமிழ் கூறும் நன்மக்கள் இலங்கையிலும் உண்டு. மக்களின் நலனை விரும்பி, மக்களுக்காகவே செயல்படும் மக்கள் அரசு இலங்கையில் இருப்பது உண்மையாயின், காம்ரேடுகளின் கைகுலுக்கலைத் தவிர்த்து, கம்மிகளின் குலவுதலை உதைத்தெறிந்து, துணிவும் நேர்மையும் நெஞ்சில் தாங்கிச் செயலாற்றுவது இன்றியமையாதது.

— கத். சேவை

# இல்லறத்தாருக்கும் மறைநூலாராய்ச்சி

திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் விளைவாக மேற்றிராசனக் குருமடங்கள் தொடங்கின; கிறிஸ்துவ மறை வளர்ச்சிக்குப் பேருதவி புரியலாயின. அதேபோல் அடுத்த ஆண்டில் கூடப்போகும் 2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பயனாக, இல்லறத்தாரும் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து பாண்டித்தியம் பெறுதற்கான மறைநூற் பயிற்சி மன்றங்கள் ஆங்காங்கே நிறுவப்படுதல் மிகவும் விரும்பி வரவேற்கத்தக்கது என்று பலர் கருதுகின்றனர். அவர்களின் இக்கருத்தைத் திரு. ஜ்யார்ஜ் ஹ்யூபெர் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் பொதுச்சங்கத்திற்கு ஆயத்தம் பற்றித் தாம் எழுதி வெளியிட்டுள்ள ஒரு புத்தகத்தில் விளக்குகின்றார்.

## போர்த்துக்கீஸிய ஆபிரிக்க மேற்றிராணிமாரின் கூட்டு நிருபம்

போர்த்துக்கீஸியரின் ஆதிக்கத்திலுள்ள ஆபிரிக்க பகுதியில் சில மாதங்களாகப் பெரும் கலகம் நடந்துவருகின்றது. கொடுங்கோலாட்சி புரியும் அவ்வெள்ளையரை எதிர்த்து ஆபிரிக்க சுதேசிகள் குழப்பம் செய்கின்றனர். சுதந்திரம் பெறத் துடிக்கின்றனர். அவர்களின் உரிமைகளையும், நியாயமான ஆசைகளையும் மதித்து அங்குள்ள போர்த்துக்கீஸிய மேற்றிராணிமார்கள் நேர்மையான முறையில் கூட்டு நிருபம் வெளியிட்டுள்ளனர்.

# பொதுச்சங்கத்தின் மத்தியகுழுக் கூட்டம்

பொதுச் சங்கத்துக்கான மத்தியகுழுவின் முதற் பொதுக் கூட்டம் இத்திங்கள் 12-ம் நாள் வத்திக்கானில் ஆரம்பமாயிற்று; 22-ம் திகதிவரை நீடிக்கும். குழுவின் தலைவரான பாப்பரசரே இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றார். சுமார் 100 அங்கத்தினர்கள் வந்துள்ளனர். அவர்களுள், 59 நாடுகளைச் சார்ந்த கர்தினால்கள் 51 பேர், பிதாப்பிதாக்கள் 5 பேர், மேற்றிராணிமார்கள் 32 பேர், நான்கு பெரிய துறவறச் சபைகளின் (ஆசீர்வாதப்பர் சபை, சாமிநாதர் சபை, பிரான்சீஸ்குசபை, யேசுசபை) தலைவர்கள் 4 பேர், பிரபல மறைநூல் வல்லுநர் ஒருசிலர் உளர். பெரிக்ளே பெலீச்சி ஆண்டகை இம்மத்தியகுழுவின் செயலாளர். பொதுச் சங்கத்துக்குத் தயார் செய்வதற்காக நிறுவப்பட்ட 11 ஆயத்த குழுக்களும் 3 செயலகங்களும் தங்கள் வேலையில் பெருமளவை முடித்துள்ளன; அதையெல்லாம் பரிசீலனை செய்து, இனி ஆகவேண்டியதை நிர்ணயிக்கவே இப்போது கூட்டம் நடக்கின்றது. பொதுச்சங்கம் எவ்வாறு, எப்போது நடைபெறும் என்று அநேகமாக இக் கூட்டத்தின் முடிவில் திட்டமாக அறிவிக்கப்படலாம்; இதுவரை உருவாகியுள்ள யோசனைகளையும் செயல் திட்டங்களையும் பாப்பரசர் வெளியிட்டுப் பலரின் அபிப்பிராயத்தையும் திரட்ட முற்படலாம்.

## வத்திக்கானில் 44 அரசியல் தூதர்கள்

வத்திக்கானோடு இப்போது அரசியல் நட்புறவு கொண்டுள்ள நாடுகளின் தொகை 44 என்று வத்திக்கான் இராச்சிய செயலகம் தெரிவித்துள்ளது. எனவே, 44 நாடுகளின் அரசியல் தூதர்கள் வத்திக்கான் இராச்சியத்திற்கு உளர்; இவர்களுள் 25பேர் தான் வத்திக்கானில் தூதரகம் அமைத்துத் தங்கியுள்ளனர்.

## பெல்ஜிய அரச தம்பதிகட்குப் பாப்பரசர் பேட்டி

அண்மையில் மணம் செய்துகொண்ட பெல்ஜிய அதிபர் போதூய்ன் அரசருக்கும், பபியோலா அரசிக்கும் 8-6-61-ல் வத்திக்கானில், பாப்பரசர் ஒரு சிறப்புப் பேட்டி அளித்தார். நாட்டுத் தலைவர்கட்குரிய மேரை மரியாதையுடனும் ஆடம்பரச் சடங்கு முறையுடனும் பேட்டி நடந்தேறியது. தந்தையவர்கள் காட்டிய ஒரு தனிப்பட்ட சலுகையால் அரசி வெண்ணுடை உடுத்திப் பேட்டிகாண அனுமதிக்கப் பெற்றாள். இச்சலுகை பண்டைய மரபுப்படி சவோய் அரச குடும்பத்துக்கு மட்டும் உரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாதுகாவலன்" பத்திராசிரியருக்கு

# பாப்பரசரின் மகிமைவிருதளித்துப் பாராட்டுவிழா

"அமைதியும், அடக்கமும் உடைய பத்திராசிரியர் ஆடம்பர வாழ்க்கையிலிருந்து ஒதுங்கியவர். அவருடைய உயரிய குணங்கள், பத்திராசிரியரை ஒரு தெய்வமனிதனுக மதிப்பிடவைக்கும். உயரிய சேவைசெய்த பத்திராசிரியருக்குத் திருச்சபை மகிமை விருதளித்துப் பாராட்டியதில் நாமெல்லாம் பங்குபற்றுகின்றோம்" என்று பாதுகாவலன் பத்திராசிரியருக்கு நடந்த பாராட்டுவிழாவில் தலைமை வகித்த செவாலியர் அருளானந்தம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சென்றசனிக்கிழமை மாலை 4மணிக்கே வானம் மந்தாரமாகி யாழ்ப்பாணத்துக்கு நிழலைச்செய்துகொண்டிருந்தது. மாங்களை ஆட்டிஅசைத்து உக்கிரவேகத்தோடுவீசிய காற்றுத் தென்றலாக மாறியது. சூரியனின் பொன்னொளி புதுமையை அள்ளிவீசியது. மரந்தடிகள் எதனையோ உற்றுப் பார்ப்பதுபோல அசைவற்றுநின்றன. "பாதுகாவலன்" என்ற தமிழ் வாரவெளியீட்டைக் கடந்த நாற்பதுஆண்டு காலமாகப் பெற்றபிள்ளையைப்போலப் பேணிவளர்த்துவந்த அந்தப் பத்திராசிரியர்—திருவாளர் அ. ஞானப்பிரகாசம் அவர்கள்—பலிபீடத்தில் வீற்றிருந்தார்.

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆலயம் யாழ்ப்பாணத்தின் சுற்றுப்புறங்களிலிருந்து சூழ்ந்துவந்த பெருமக்களின் கூட்டத்தால் நிரம்பிவழிந்தது. யாழ்ப்பாண மேற்றிராணியார், அதிவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை, ஓ. எம். ஐ. ஆண்டகைஅவர்கள் பத்திராசிரியருக்குப் பாப்பாசரால் வழங்கப்பெற்ற மகிமைவிருதை அணிந்து, "தெதேயும்" என்ற தோத்திர கீதம்பாடி, சற்பிரசாதஆசீர்வாதமும் அருளினர்கள். பின்னர், பத்திராசிரியரின் பரித்தியாகசீலத்தையும், தேவநேசத்தையும் பற்றி மேற்றிராணியாண்டவர் அவர்கள் இரத்தினச்சுருக்கமாகக் குறிப்பிட்டு ஆசிரியர் அவர்களைப் பாராட்டலாயினர்.

ஆசனக்கோவிலின் முன்றிலிலுள்ள பத்திரிசியார்கல்லூரி மணிமண்டபத்துக்குப் பத்திராசிரியர் அழைத்துச் செல்லப்படவே, அவருடைய அன்பர்கள் அவரைப் பூமாலைகளால் குளிப்பாட்டினர்கள். குருப்பிரசாதிகளும், பெரியோர்களும், ஆசிரியர்களும், பத்திரிகை வாசகர்களும், மகளிருமாக மண்டபம்நிறைய வந்திருந்த மகாசபைக்குத் திருச்சபையால் முன்னரே மகிமைப்படுத்தப்பட்ட செவாலியர் அருளானந்தம் அவர்கள் தலைமைதாங்கியது பொருத்தமேயாகும். பத்திராசிரியர்அவர்களை வரவேற்றுக் கத்தோலிக்க அச்சகத்தார் சார்பாகத் திரு. ரி. செல்லத்துரைபாடிய வாழ்த்துப்பாக்களுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

மணிவசனங்களில் பொறிக்கப்பட்ட மங்கல உபசாரப்பத்திரத்தை அன்பர்கள் சார்பிலும், வாசகர்கள் சார்பிலும் திரு. வி. பிரான்சிஸ் ஆசிரியர்அவர்கள் வாசித்தளித்தார்கள். தலைமைப்பேருரையில் தமக்கியல்பான அனுபவத் தேன்துளிகளைச்சொரிந்த செவாலியர் அவர்கள் முதற்குறிப்பிட்டவாறு பேசிவிட்டு, பாதுகாவலன் வளர்ச்சிபெற்ற வரலாற்றையும், தொண்டாற்றிய பெருமக்களையும் குறிப்பிட்டபின்னர், பாதுகாவலன் ஆசிரியரின் அடக்கம், தெய்வபக்தி, முயற்சி, மனப்பதருமை எண்பவற்றைஎடுத்துச் சிலாகித்துப்பேசினர்.

கொழும்புத்துறை, போதனகல்லூரி அதிபரும், காவலன் நிர்வாகியுமாகிய சுவாமி வ. தியோகுப்பிள்ளை அவர்கள் பத்திரிகை நடாத்துவதில் ஏற்படும் சிக்கல்களைக் குறிப்பிட்டு, 40ஆண்டுகாலம் தன்னந்தனியாகப் பத்திரிகை நடாத்திய பத்திராசிரியர் அவர்களின் தியாகத்தைப்பாராட்டி, அவரில் காணப்படும் கத்தோலிக்கசீலியத்தை வியந்தார்.

"சமூகத் தொண்டன்" ஆசிரியர் திரு. கே. பி. முத்தையா அவர்கள் பாதுகாவலனேடு தமக்குண்டான தொடர்பைக் குறிப்பிட்டு, பாதுகாவலன் ஆசிரியரின் தாழ்மையான வாழ்க்கையையும், முயற்சித்திறனையும், பாதுகாவலனின் வளர்ச்சியையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசிய திரு. எஸ். எம். ஜே. லூயிஸ் அவர்கள், இளமை தொட்டுப் பாதுகாவலனில் தனக்குள்ள பேரவாவையும்,பெருமதிப்பையும் குறிப்பிட்டு, பாதுகாவலன் ஆசிரியரின் தெய்வபக்தி தன்னையாட்கொண்டவிதத்தை விளக்கினர்.

ஈற்றில் பேசிய வித்துவான் ச. அடைக்கலமுத்து அவர்கள், காவலன் ஆசிரியர் இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்த திறனையும், பாதுகாவலனைப் பற்றிய பிறர் அபிப்பிராயங்களையும் குறிப்பிட்டு, இக்காலப் பத்திரிகைகளின் சீர்கேடுகளைக் கண்டித்தார். சித்திகாமாகத் தொண்டாற்றிய பத்திராசிரியரின் வெற்றியின் இரகசியம் செபமாலையிலும், மாதவவளன் பக்தியிலுமே தங்கியதென்று பாராட்டி உரை நிகழ்த்தினர். பத்திராசிரியர் கரகோஷத்தின்மத்தியில் திரு. சி. எஸ். நாயகம் அவர்களால் பொன்னடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டபின்னர், பத்திராசிரியரின் பழையமாணவன் திரு. செ. சின்னத்துரை அவர்கள் ஏகலைவன் கதையை வர்ணித்துவிட்டுப் பத்திராசிரியர் பேரில் பாடப்பெற்ற பாடல்களை அழகாகப் பாடினர்.

இறுதியில் பத்திராசிரியர் எழுந்து, தமக்களிக்கப்பட்ட மகிமை விருதுகளுக்காகத் திருச்சபை அதிகாரிகளுக்கு நன்றிதெரிவித்துவிட்டு, கற்பனை மடைதிறந்தாற்போலத் தான் கௌரவிக்க வேண்டியவர்களைக் குறிப்பிட்டு நன்றிப்பிரவாகத்தில் உணர்ச்சியோடுபேசினர். தமிழ் வளர்த்த தாமோதரனர் குலத்தில் தோன்றிய குழந்தையொன்று பத்திராசிரியராகவந்த வரலாற்றை அவர் எடுத்துரைத்தபோது சபையோர் மெய்மறந்து லயித்தனர். மேலும், பத்திராசிரியர் பத்திரிகைப் பணியில் தனக்குப் போதாவாயிருந்த சுவாமி ஞானப்பிரகாசர், சுவாமி ஆசீர்வாதம் என்பவர்களைக் குறிப்பிட்டபோது, ஆசிரியர் கண்களே நன்றிச் சுமையால் கலங்கின. இப்பொழுது தனக்குத் துணைபுரியும் சுவாமி மரியாம்பிள்ளை, சுவாமி தியோகுப்பிள்ளை 'அமுது', பண்டிதர் செல்வரத்தினம், ஜெயம் என்பாரையும் பேச்சிலேகுறிப்பிட்டார். எழுத்தின் வெற்றிக்கு ஈடிணையில்லாத துணையான மாதவ வளனைப்பற்றி அவர் உருக்கமாகக் குறிப்பிட்டது சபையோரைக் கரைந்துருகச் செய்தது. பத்திராசிரியர் தன்பேச்சை முடித்துக்கொண்டதும், கரகோஷம் மண்டபத்தையே அதிரச்செய்துவிட்டது.

வரவேற்புச்சபைச் செயலாளர்திரு. வீ. கபிரியேற்பிள்ளை அவர்களின் நன்றித்துதியோடு பாராட்டுவிழாப் பூர்த்தியாயிற்று.

— நிருபர்.

# பாப்பரசர்விருதுபெற்ற பத்திராசிரியர்

(க. த. ஞானப்பிரகாசம்)

விருத்தம்

சீர்மருவு கலைமாதுந் திருமாதும் நிருத்தமிடுஞ் செல்வ நாடாம்
பேர்மருவு யாழ்ப்பாணம் பிறங்குசத்ய வேதமறைப் பெருமை நாட்டும்
ஏர்மருவு "காவல"னின் இனியபிதா வரிசையிலே எவரும் போற்ற
நேர்மருவு தொண்டாற்றும் நிகரிலாப் பெருந்தகையே! நீடுவாழ்க!

மண்ணினிலே தேசாதி பதிப்பதவி யென்றுலும் வருடம் ஐந்து
நண்ணுமுனர் விலகிடுவர் நாமறிந்த உண்மையிது ஞானமென்னும்
தண்ணமுதக் கடன்மூழ்கிச் சத்யமறை முத்தெடுக்கும் தரும சீலா! [க!
எண்ணைந்து வருடங்கள் சென்றதென் கொல்! நின்னிளமை இன்னும்வாழ்

முத்திக்கு வழிகாட்ட முயலுதிருத் தொண்டெல்லாம் முனைந்து செய்யும்
தித்திக்குஞ் சொல்லுடைய உத்தமனே! பத்திக்காய்த் தெரிந்த செல்வா!
கத்திக்குங் கலங்காத உளமுடையாய்! ஞானப்பிர காசப் பேராய்!
வத்திக்கான் வேந்தரது மகிமைபெறு விருதுபெற்றேய்! வாழ்க! வாழ்க!

## உல்லாச வேளை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க பொதறிவு எவ்வளவுண்டென்பதையறியப் போட்டிப்பரீட்சைகள் நடாத்திஞல் நல்லதென எண்ணுகிறேன். அடுத்தவாரம் முதலாவது பரீட்சையை தொடங்கலாம். கத்தோலிக்கர்களாகத் தேசங்களை ஆளுகை செய்பவர்களையும் அவர்கள் ஆளும் தேசங்களையும் தெரிவிக்கவேண்டும். அதிகமாகத் தெரிவித்தவர்கட்கு நல்லதொரு பரிசளிப்பேன்.

கார்மெலா : இந்தப்போட்டிக்கு பெரியத்தாளையும் பெரியண்ணவையும மத்தியஸ்தர்களாக நியமிக்கலாம்.

அம்மா : நானும் ஒரு பரிசுகொடுப்பேன். மறந்துவிடாதீர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3532

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 19275-ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் காலஞ்சென்றுபோன E. K. N. செல்வத்துரையுடைய உரிமைத் தத்துவகாரி யாழ்ப்பாணம், தற்போது நம். 18, "செல்சிகாடின்" கொழும்பு, மாஜிறித்தா பேள் செல்வத்துரை.

— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெரு
1. தம்பு முத்துராசாவும்
2. பெண் பாக்கியமும்

யாழ்ப்பாணம், கதலிக் அச்சகம் ரேட்
3. மரியாம்பிள்ளை பிரான்சிஸ் கிறிஸ்பன்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3532-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1961-ம்ஆ புரட்டாதிமீ 2-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 23,210-ம், 26-7-60 தொடக்கம், 31-1-61 வரைக்கும் ரூபா 21,000-க்குப் 10%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 362-57சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூர்இறை "பறையன் மணற்காடும், பேயன் தலைமடையிற்குளமும், மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 8-ம், குளி 14-ம். கல்வீடும, கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். யாழ்ப்பாணம் லைசென்ஸ் உலாந்தா மேஸ்தர் J. இம்மானுவெல் 1948-ம்ஆ சித்திரை 3-ம்திகதி 379-ம் இலக்கத்தில் அளந்துகொண்ட படத்தின்படியும், அதில் இரண்டாம் துண்டாகச் சுட்டப்பட்ட பாகம் நிந்தமாய் 8 பரப்பும், குளி 14-ம். அதாவது முழுக்காணியின் விசாலம் உறுதிப்படி (30) முப்பதுபரப்பு. ஆனல், படத்தின்படி 28 பரப்பும், குளி 14-ம்.

சொல்லப்பட்ட இரண்டாம் துண்டு 8 பரப்பு, குளி 14-க்கும் எல்லை: கிழக்கும், வடக்கும்—ஆறுமுகம் அருளப்புவுக்கும், பிரதிநாமம் செல்லையா பெண் அக்கிநேசுக்கும் உரிய ஆதனம். மேற்கு—யாழ்ப்பாணம், ரோமன் கத்தோலிக்க அத்தியகஷ குருவின் ஆதனம். தெற்கு—வீச்ரோட்டு. இக்காணி யாழ்ப்பாணம, காணிப்பதிவு கந்தோரில் D 270/154 இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.



## 5-ம் வருட மரண ஞாபகம்

"ஆண்டவரே, தேவரீர் அன்று சிலுவைப்பீடத்தில் பலியாகும்நேரம் பச்சாத்தாபக் கள்வனுக்குக் கிருபை புரிந்தது போல், மரியம்மா பொன்னையாவின் ஆத்துமத்தின்பேரில் இரக்கமாயிருந்து அவரை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும் ஆமென்"

மண்ணினின்று மறைந்தும் எம் அகக்கண்களைவிட்டு என்றென்றும் பிரியாத எனது அன்பான மனைவியும், எங்கள்நேச அன்னையுமாகிய திருமதிமரியம்மா பொன்னையாஅவர்கள் கர்த்தர் திருப்பாதம் சேர்ந்த ஐந்தாவதுஆண்டு நிகழும் ஆனி மாதம் 27-ந்திகதி செவ்வாய்க்கிழமையோடு பூர்த்தியாகின்றது. அன்றுதினம் யாழ்ப்பாணம், சுண்டிக்குளி அர்ச். ஸ்நாபகயுவானியார் கோவிலில் காலை 5-30 மணிக்கு ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறும். இதைக்கண்ணுறும் உற்றார், உறவினர், நண்பர்கள்யாபேரும் திவ்விய பூசைகண்டு இவவுடைய ஆன்மசாந்தியடைய இறைவனிடம் மன்றுடும்படி பணிவுடன் கேட்டுநிற்கிறோம்.

இவவைப்பிரிந்து துயருறும் :
பத்தாவும், பிள்ளைகளும்.

"மரியவாசா"
446, ஆஸ்பத்திரிரோட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## அவசரகாலச் சட்டம்

அவசரகாலச்சட்டத்தை இரண்டாம் முறையாக மேலும் ஒருமாதகாலத்திற்கு நீடிக்கச்செய்திருப்பதாகக் கவர்னர்-ஜெனறல். சேர் ஒலிவர் குணதிலகா சென்ற வெள்ளிக்கிழமைஇரவு வெளியிடப்பட்ட ஒருவிசேட 'கசெற்'மூலம் பிரகடனஞ் செய்திருக்கின்றார். இது சென்ற சனிக்கிழமைமுதல் அமுலுக்கு வந்துள்ளது. அவசரகாலச் சட்டம் முதன்முதலாகச் சென்ற சித்திரை 17-ந்திகதியன்று பிரகடனஞ் செய்யப்பெற்றுப் பின்னர் வைகாசி 17-ந்திகதியன்று புதிப்பிக்கப்படலாயிற்று.

## யானைகளின் அட்டகாசம்

வட்டக்கச்சிக் குடியேற்றதிட்டத்திலே பத்துயானைகள் ஒருகூட்டமாக வந்து அப்பகுதி விவசாயிகளின் பயிர்பச்சைகளை அழித்துவருவதாகப் புகார் செய்யப் பட்டிருக்கிறது. இந்தயானைகளால் அச்சமடைந்த குடியேற்றவாசிகள் அக்குடியேற்றபகுதியைச் சூழவார ஆறடிஆழமான அகழிஒன்றைத் தோண்டித் தங்களுக்குப் பாதுகாப்பளிக்குமாறு இராமநாதபுரம் குடியேற்றஅதிகாரிக்கு ஆலோசனைகூறி அரசாங்கத்துக்கு இதனைத்தெரிவித்து ஆவனசெய்யும்படி அவரைக்கேட்டிருக்கிறார்கள்.

## அரசாங்கம் எடுத்த பாடசாலைகள்

அரசாங்கம்எடுத்தபாடசாலைக்கட்டடங்களைச் சமயசம்பந்தமான கருமங்களுக்கு உபயோகிக்கலாமெனக் கல்விப்பகுதி அறிவித்துள்ளது. சமயகாரியங்களுக்கும், நெடுங்காலமாக நடைபெற்றுவந்த மற்றும்விழாக்களுக்கும் பாடசாலை நடவாதநேரத்திலே பாடசாலைக் கட்டடங்களைத் தந்துதவ வேண்டுமென்று கொழும்புஅதிமேற்றிராணியார் கேட்டுக்கொண்டதின்பேரிலேயே கல்விப்பகுதி இவ்விதம்தெரிவித்துள்ளது. கத்தோலிக்க பாடசாலைகள்பல வித்தியாதிபதியின்கீழ் வந்தது முதல் சமயகாரியங்களைப் பொறுத்தமட்டில் பலவிதஅசௌகரியங்கள் ஏற்படலாயினவென்று தெரிவித்து, இதர சமயஸ்தாபன பாடசாலைகளுக்கும் இந்தச்சலுகை அளிக்கப்பட வேண்டுமென்றும் அதிமேற்றிராணியார் கேட்டிருந்தார்.

## சீனிச்செய்கை ஆரம்பம்

கல்லோயாச் சீனித்தொழிற்சாலையிலே இம்மாதமுதல் சீனிஉற்பத்தி செய்யும்வேலை தீவிரமாக நடைபெற்று வருகின்றது. 24மணித்தியால வேலைநேரத்தைக்கொண்ட நாள்ஒன்றுக்கு இரண்டாயிரம்தொன்கரும்பு பிழியக்கூடியதும், வருடம்ஒன்றுக்கு முப்பதினாயிரம்தொன் சுத்திகரிக்கப்பட்டசீனி உற்பத்திசெய்யக் கூடிய சக்திவாய்ந்ததுமான இந்தச்சீனித்தொழிற்சாலை 1கோடியே 90இலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்படலாயிற்று. இம்மாத முதல் சீனி உற்பத்திசெய்யும்வேலை ஆரம்பிக்கப்பட்டபோதிலும் கரும்பு அறுவடை துரிதமாக நடைபெறுததால் எதிர்பார்த்தஅளவிலே நாளாந்த உற்பத்திவேலையைச் செய்யமுடியாமல் இருக்கிறது. கரும்புஅறுவடையில் இராணுவத்தினரே ஈடுபட்டுள்ளனர். 2,500 ஏக்கர்காணியிலும் அறுவடை செய்யப்படும் கரும்பிலிருந்து 4,500 தொன்சீனி உற்பத்திசெய்யப்படுமென்றும், அதனால் வெளிநாட்டுச் செலவாணியில் 25இலட்சம்ரூபா சேமிக்கப்படுமென்றும் தெரியவருகிறது. சுத்திகரிக்கப்பட்ட ஒருதொன்சீனி உற்பத்திசெய்ய 650ரூபா — அதாவது இறுத்தல்ஒன்றுக்கு 30சதம்வரை செலவாகின்றது.

## மடுதமடுத் திருயாத்திரையும் பிரயாண வசதிகளும்

**ஆனி 23-ந் திகதி முதல் ஆடி 4-ந் திகதி வரை**

மருதமடுத் திருப்பதியின் இருமகோற்சவங்களையும் முன்னிட்டு வழமைபோல றெயில்வேமூலம் குறைந்தசலாரிலே பிரயாணஞ்செய்து திரும்புவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பத்து அல்லது அதற்கு அதிகமானோர் ஒருகுழுவாகச்சேர்ந்து ஒன்றேகால்சலாரிலே எல்லா வகுப்புகளிலும் பிரயாணஞ்செய்து திரும்பலாம். 50 மைல் அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திலுள்ள றெயில்வே ஸ்ரேஷன்களிலிருந்து மடுறோட்டுக்கு மூன்றும் வகுப்பிலே ஒன்றரைச் சலாரில் பிரயாணஞ்செய்து திரும்பலாம். கிளிநொச்சி முதல் காங்கேசன்துறை வரையிலுள்ள றெயில்வே ஸ்ரேஷன்களிலிருந்து வவுனியாவுக்கும் அதே குறைந்த சலாரில் மூன்றும்வகுப்பிலே பிரயாணஞ்செய்யலாம். மடுறோட்டிலிருந்து பஸ்இணைப்புச் சேவையின் சலாரும் 50 சதத்திலிருந்து 35 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தென்னிலங்கை யாத்திரிகர்கள் மடுறோட் வழியாகவும், வடஇலங்கை யாத்திரிகர்கள் வவுனியாவழியாகவும் செல்லக்கூடிய பஸ்இணைப்புச் சேவையும் உண்டு. மடுறோட்வழியாகச் செல்வதற்கான றெயில் — பஸ் டிக்கெற்றுகள் எல்லா றெயில்வே ஸ்ரேஷன்களிலும் வழங்கப்படும். இந்தவசதிகள் நிகழும் ஆனிமாதம் 23-ந் திகதி முதல் ஆடி 4-ந் திகதிவரை செய்யப்படும்.

## புத்தகுருமாரும் உத்தியோகமும்

இனிமேல் புத்தகுருமார் அரசாங்கத்தில் உத்தியோகம்பெற இடமளிக்கப்படமாட்டாது; அவர்கள் அரசாங்க உத்தியோகம் பெறவேண்டுமானால் முதலாவதாக நாயகதேரோவிடமிருந்து அனுமதிபெறவேண்டும்; அவர்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றபோதிலும் அவர்களுக்குச் சம்பளம் நேர்முகமாகக் கொடுபடமாட்டாது; அவர்கள்சேர்ந்துள்ள சங்கங்களுக்கே அது கொடுக்கப்படும்; புத்தகுருமாரில் சிலர் அரசியலிலும், அரசியல்வாதிகளுடனும்சேர்ந்து புத்தமதகோட்பாடுகளுக்கு மாறாக நடந்துகொள்ளுகின்றனரென்று உள்நாட்டு — கைத்தொழில் — கலாசாரமந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக சென்றசனிக்கிழமை கண்டியைச்சேர்ந்த உடுநுவரத்தொகுதிப் புத்தகலவன் பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்துப் பேசியபோது கூறியிருக்கின்றார்.

## வாக்காளரின் பெயர் இடாப்புகள்

வாக்காளரின் பெயர் இடாப்புகள் தற்போது முதன்முதலாக அரசியல் கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன. வாக்காளரின் திருத்தப்பட்ட இடாப்புகள் தற்போது முதன்முதலாகத் தபாற்கந்தோர்களிலே வாக்காளர் பார்வையிடத்தக்கதாக வைக்கப்பட்டுள்ளன. ஆனிமாதமுடிவுவரை அங்கு இவைகள் வைக்கப்பட்டிருக்கும். அதன்மேல் தேர்தல்பகுதி உத்தியோகஸ்தர்கள் வீடுகள்தோறும் சென்று அவைகளைப் பரிசோதனை செய்வார்கள். பின்னர் மேலும் திருத்தப்பட்ட இடாப்புகள் வாக்காளர் பார்வையிடுவதற்காக வைக்கப்படும். ஆகவே, வாக்காளரெல்லாம் தங்களுடையபெயர்கள் இடாப்புகளில் இல்லாதிருப்பின் அதைப்பற்றி முறையீடு செய்வதற்கு இருசந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## 55வயதுகடந்த அரசாங்க ஊழியர்கள்

55வயதுகடந்தவர்கள் இளைப்பாறவேண்டுமென்றபிரமாணத்தை அரசாங்கம் கண்டிப்பாக நடைமுறைக்குக் கொண்டுவரும்போது இவ்வருடமுடிவிலே ஐந்துநிரந்தரகாரியதரிசிகள் இளைப்பாறவேண்டியோராவர்கள். தொழில்-தேசியசேவைகளின் மந்திரிகாரியாலயத்தைச்சேர்ந்த திரு. சி. பி. குமாரசிங்கா (வயது 59), விவசாய-நீர்ப்பாசன — காணிமந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த திரு. சி. பி. பி. பெறேரு (58), வர்த்தக—உணவு—கப்பல்போக்குவரத்து மந்திரி காரியாலயத்தைச்சேர்ந்த திரு. கே. ஆழ்வாப்பிள்ளை (56), கைத்தொழில்-உள்நாட்டு- கலாசாரமந்திரி காரியாலயத்தைச்சேர்ந்த திரு. எஸ். சி. பெர்னண்டோ (54), தலதாபன-வீடமைப்புமந்திரிகாரியாலயத்தைச்சேர்ந்த திரு.வி.சி.ஜயசூரிய (54)என்பவர்களே ஐந்துநிரந்தரக் காரியதரிசிகளுமாவர். காரியாலய பகுதிகளின் தலைவர்களில் வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டி சில்வா (59), உள்நாட்டு வருமானபகுதித் தலைவர் திரு. எல்.ஜி. குணசேகரா(55), கைலஞ்சப் பகுதித்தலைவர் திரு. ஏ. டபிள்யு. எச். அபெசுந்தரா (55), பொதுத் தருமகர்த்தாப் பகுதித்தலைவர் திரு. வி. எவ். குணரட்ண (56) என்பவர்கள் அடங்குவார்கள்.

## உதவிச் சொலிசிற்றர் ஜெனறல்

உதவிச்சொலிசிற்றர் — ஜெனறலாய் இருந்துவருகிறவரான ஜனுப் ஏ. சி. எம். அமீர் வருகிறஆடிமாதம் 5-ந்திகதியன்று அரசாங்கசேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். இவருக்குத் தற்போதுவயது46. 1940-ம்ஆண்டு லண்டன் நகரிலே ஒருபரிஸ்றராக அரங்கேறியஇவர் இலங்கைக்குத் திரும்பிவந்ததும் சிலவருடகாலம் ஒருநியாயவாதியாகக் கடமையாற்றியபின் அற்றேணிஜெனறலின் காரியாலயத்தில்சேர்ந்து 1946-ம்ஆண்டு ஒருமுடிக்குரிய நியாயவாதியாக நியமனஞ் செய்யப்பெற்றார். பின்னர் 1957-ம் ஆண்டு உதவிச்சொலிசிற்றர்— ஜெனறலாகநியமனம்பெற்றிருந்தார். தற்போது இவர் ஒருநியாயவாதியாகக் கடமை பார்க்கவிருக்கின்றார்.

## வித்தியா வெகுமதி பெற்ற மாணவர்கள்

வித்தியாவெகுமதி பெற்றுள்ள மாணவர்கள் தாங்கள்படித்து ஆயத்தஞ்செய்துவரும் எந்தப்பரீட்சையிலாவது சித்தியடையாதேபோனால் அவர்களின் வித்தியாவெகுமதிகள் நீக்கிவிடப்படுமெனக் கல்விப்பகுதிஒருபுதிய கட்டளை பிறப்பித்திருக்கிறது.

## விபத்துக்குள்ளான பஸ்

பதுளையிலிருந்து சென்றஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 15நிமிஷம்பிந்தி 3.15 மணிக்குப் புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச்சபை எக்ஸ்பிறஸ் பஸ்ஒன்று பதுளை-பண்டாரவளைவீதியிலே பதுளையிலிருந்து நான்குமைல் தூரத்தில் வீதியைவிட்டு விலகி ஓர் மரத்துடன்மோதி விபத்துக்குள்ளானபோது அதிலேபிரயாணஞ்செய்தவர்களில் 28பேர் காயமடைந்தனர். இவர்களில் சாரதியும்,கண்டக்றரும் உட்படப் பதினைறுபேர் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் வெளிநோயாளர்பகுதியில் சிகிச்சைபெற்றனர். சாரதியும், கண்டக்றரும், பிரயாணிஒருவரும் ஆபத்தானநிலைமையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate Estate of the late Arokiam Pushparanee wife of Anthiresu Daniel Apputhurai of Eachchamoddai Road, Chundikuli, Jaffna.

Deceased.

Testamentary Jurisdiction } No. 979/T.

Anthiresu Daniel Apputhurai of Eachchamoddai Road, Chundikuli, Jaffna.

Petitioner.

Vs.

1. Rebecca Jeevamany daughter of A. D. Apputhurai and
2. Apputhurai Anton Thevathas both of Chundikuli, Jaffna—the 1st and 2nd Respondents are minors appearing by their Guardian-ad-litem.
3. Henry Solomon Daniel of Jaffna College, Vaddukoddai.

Respondents.

This matter coming on for disposal before N. Krishnadasan Esquire, District Judge, Jaffna on the 17th day of May 1961 in the presence of Mr. S. C. Mahadeva, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 15th day of May 1961 having been read:

It is ordered that the 3rd Respondent abovenamed be and he is hereby appointed Guardian-ad-litem over the 1st and 2nd minor-respondents for the purpose of representing them in these proceedings; that the abovenamed Petitioner be and he is declared entitled as the lawful husband of the deceased abovenamed to have Letters of Administration to the estate of the deceased issued to him accordingly; unless the Respondents or any other person or persons interested shall on or before the 30th day of June 1961 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 17th day of May, 1961.

Sgd. N. Krishnadasan,
District Judge.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2984.

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம்
இல. 4, பெருமாள்கோவிலடி
வடக்குஒழுங்கை
நாராயணசுவாமி சிவானந்தன்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், புத்தூர்றோட்
கள்ளியங்காடு
சின்னத்தம்பி சோமசுந்தரம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2984-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1961-ம்ஆ ஆடிமீ 29-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் ரூபா1,000. இன்னும் அதற்கு 26-6-60 தொடக்கம் இறுப்டும்வரையும் 100-க்கு 5%வட்டியும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோயிற்பற்று மீசாலைஇறை "இலகடி" பர. நில. இலா. 15-உம், தென்னைகளும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— காசியர் வல்லிபுரத்தின் ஆதனம். வடக்கு — நாகமுத்து கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்கும், மறுபேருக்கு முரிய ஆதனம். மேற்கு— தெரு. தெற்கு— கந்தர் பெண் பொன்னுச்சிக்கும், சகோதரிக்கு முரிய ஆதனம். இதிற்சொரியலாய் அலைவாகி.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 20-6-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | | |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| | | ஒ. | ஒருசந்தி நாள் |

### ஆனிமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ஞா. | 2 | **பெந்தக்கோஸ்தின்பின் 5-ம் ஞாயிறு** (வி. ம) | ப. |
| 26 | தி. | | அர்ச். அருளப்பரும், சின்னப்பரும் | சி. |
| 27 | செ. | ம | காலதினம் (ஞாயிறு பூசை) | ப. |
| 28 | பு. | | அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளின் ஆயத்ததினம் | ஊ. |
| 29 | வி. | 1 | **அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாள்** (வி. ம) | சி. |
| 30 | வெ. | | அர்ச். சின்னப்பரின் ஞாபகதினம் (அர்ச். இராயப்பர் ஞா) | சி. |

### ஆடி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சனி | 1 | **யேசுநாதருடைய விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தின் திருநாள்** | சி. |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
ஆனிமாதம் 24-ந் திகதி

## மனப்பான்மை மாறவேண்டும்

தமிழ்மக்கள் அரசாங்கஉத்தியோகங்களை எதிர்பார்த்துத் தங்கள்பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றிவந்த ஒருகாலம் இருந்தது உண்மைதான். ஆனால், அந்தக்காலம் மலையேறிவிட்டது. அதனால் காலத்திற்கேற்றகோலமாகத் தங்கள்மனப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியது அவர்களின்கடனாகும். இவ்விதம் நாம் எழுதுமிடத்து அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உயர்தரக்கல்வியோ, அன்றேல் உத்தியோகக் கல்வியோ ஊட்டவேண்டியதில்லையென்று அவர்களின் மனோற்சாகத்தைக் குறைப்பதில்லை. ஆனால், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உயர்தரக்கல்வி பயிற்றினாலென்ன, உத்தியோகக் கல்வி பயிற்றினாலென்ன, அவர்களின் எதிர்காலவாழ்க்கை சிறப்படையச்செய்வதில் கருத்தாயிருக்க வேண்டுமென்றே ஊக்கப்படுத்துகின்றோம். பிள்ளைகளின் உயர்தரக்கல்வி பயன்தந்தாலென்ன, தராவிட்டாலென்ன, உத்தியோகம் கிடைத்தாலென்ன, கிடையாவிட்டாலென்ன அவர்கள் பிறதுறைகளில்இறங்கித் தாங்கள் கற்றகல்வியைப் பயன்படுத்தித் தங்கள்பொருளாதாரத்தை வளப்படுத்தக் கூடியவர்களாயிருந்தால் அவர்களின் எதிர்காலவாழ்க்கை சிறப்படையுமென நம்பியிருக்கலாம்.

இன்றுஎத்தனையோ கற்றவாலிபர்களும், பெண்பிள்ளைகளும் எஸ். எஸ். சி., எச். எஸ். சி., பி ஏ. முதலாம் பரீட்சைகளில் அரங்கேறிவிட்டு ஏதும்ஒருபாடசாலையில் ஆசிரியதொண்டாற்ற இடம் கிட்டாதோ, ஆசிரியகலாசாலைகளில்சேர்ந்து பயிற்சிபெற்று ஆசிரியர்களாகும்வாய்ப்புக் கிடையாதோவென்று ஒருபால் அங்கலாய்த்துக் கொண்டிருக்க, மறுபால் பயிற்சிபெற்றும், ஆசிரியதராதரப் பத்திரம்பெற்றும் பாடசாலைகளில் இடமில்லையேயென்று தவித்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றும்எத்தனையோ கற்றவாலிபர்கள் உத்தியோகம் கிட்டாமையால் உழைக்கும் வகையோ, பிழைக்கும்வகையோ அறியாது ஊசலாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் இவ்விதம்காலம்போக்கிக்கொண்டிருந்தால் இறுதிமுடிவென்ன? ஆகவே, இவர்கள் பிறதுறைகளில் துணிகரமாக இறங்கவேண்டும். ஒருநாட்டில் ஒருசாகியத்தாரின் பொருளாதாரம் உத்தியோகத்தில்அல்ல, கைத்தொழிலிலும், கமத்தொழிலிலுமே தங்கியிருக்கிறதென்பதை இவர்கள் உணரவேண்டும்.

இன்று, எத்தனையோ கற்றவாலிபர்கள் கிளிநொச்சிமுதலாம் குடியேற்றதிட்டங்களில் காணிகள்பெற்றுப் பிரயாசைக்கஞ்சாது கூட்டுறவுமுறையிலே விவசாயம்செய்தும், கோழிப்பண்ணைகள் வைத்துநடாத்தியும் சிறந்த பலன் அடைந்துவருகிறார்களென்று சொல்லக் கேள்விப்படும்போதும், இன்னும் தாங்கள்காடுவெட்டிப் பண்படுத்தியகாணிகள் தங்களுக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுவதைக் கேட்கும்போதும் நாம்பெருமையடைவது ஓர்ஆச்சரியமாகாது. ஒருநாட்டின்பொருளாதாரம் அந்நாட்டின் கமத்தொழிலிலும், கைத்தொழிலிலுமே தங்கியிருக்கிறது. நீர்வளமும், நிலவளமும் இருந்தபோதிலும் எமதுநாட்டு வாலிபர்கள் எத்தனையோபேர். அவற்றைப்பயன்படுத்தும் வகையறியாது இன்னுமே உத்தியோகமோகம்பிடித்துப் பேனாபிடிக்கும் வேலைதேடி யலைந்துதிரிவதைக் கவனிக்கும்போது இவர்கள்எதிர்காலத்திலே இரண்டும்கெட்டு அலையவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. படிப்பதெல்லாம் எதற்கு? ஒவ்வொருவரும் தங்கள்வாழ்க்கையைச் சீரியமுறையிலே சிறப்பாகநடாத்துவதற்கேயல்லாது மற்றப்படி பேனாபிடிக்கும் உத்தியோகத்துக்கேயென்ற மனப்பான்மை இன்றையநிலைமையில் முற்றாகமாறவேண்டும். கற்றவாலிபர்கள் கமத்தொழிலில் ஈடுபட்டால் அத்தொழிலிலும் ஒரு புரட்சிகரமான முன்னேற்றத்தைப் பெறமுடியுமன்றோ!

அதேபோலக் கைத்தொழில்களில்— சிறப்பாகக் குடிசைக்கைத்தொழில்களில் கரிசனையெடுக்கத் தொடங்கினாலும் நாம் பெரும்பலன் அடையலாம். உதாரணமாக, வடபகுதியிலே சமீபகால முதல் கைத்தறி நெசவுதொழில் நடைபெற்றுவருகின்றது. அநேகவிடங்களிலே நெசவுநிலையங்கள் திறக்கப்பட்டுப் பலவிதபுடவைகளும் நெசவுசெய்யப்படுகின்றன. இங்கே நெசவுத்தொழில் விருத்தியடையவேண்டுமானால் நெசவுசெய்யப்படும் சேலைகளையும், மற்றும்ஆடைகளையும் இங்குள்ளமக்கள் வாங்கியணிய முன்வரவேண்டும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்று பெருமைபாராட்டி உள்ளூரிலே உள்ளூர்மக்களால் நெசவுசெய்யப்படுகிறவைகளை உள்ளூர்வாசிகள் மனமுவந்து ஆதரிக்கவேண்டும். உள்ளூர்க்குடிசைக்கைத்தொழில்களை உள்ளூர்மக்கள் ஆதரித்தால் அவைகள்விருத்தியடைந்து எத்தனையோஉள்ளூர்மக்கள் பிழைக்க வழியேற்படும். உத்தியோகமோகம்ஒழிந்து, கைத்தொழில், கமத்தொழிலிலே கற்றவாலிபர்கள்ஈடுபடத்தொடங்கினால் எமது நாட்டின்எதிர்காலம் சுபீட்சமடையுமென்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

# யேசுவின் திருஇருதயப் பத்தி

"அவர் நம்மைச் சிநேகித்தார் தம்மைமுழுதும் நமக்குக் கையளித்தார். நமக்காகச் சிலுவையில் உயிர் விட்டார். தமது இருதயத்தையே நமக்கு அர்ப்பணித்தார். ஆம், யேசுவின் இனிய இருதயம் அன்பின் ஊற்று; இன்பத்தின் இல்லம்; தயாளத்தின் பிறப்பிடம்; சிநேகத்தின்சுவாலை; இச்சிநேகச்சுவாலை நம் ஒவ்வொருவர்மட்டிலும் கொழுந்துவிட்டெரிகின்றது; நம்மைத்தம்மிடம் அழைக்கின்றது; தம்மையே நமக்குக் கொடுக்கின்றது — நற்கருணைவழியாக. ஆனால், யேசுவின் இச்சிநேகம் புறக்கணிக்கப்படுகின்றது. அசட்டை செய்யப்படுகின்றது. அவமரியாதைக்குள்ளாகின்றது. நன்மை செய்யவேணுமென்ற நம் இதய அன்பரின் உருக்கமான ஆசை அலட்சியம் செய்யப்படுகின்றது.

"மனிதர்களை அத்தியந்தவிதமாய்ச் சிநேகிக்கும் இந்த என் இருதயத்தைப்பார். மனிதரை எம்மாத்திரம் இந்த என் இருதயம் சிநேகிக்கிறதென்றால் அந்தச் சிநேகத்தைக் காண்பிக்க அது உங்களுக்குச் செய்யாமல்விட்டதென்ன? மகளே! மகனே! நீயாகிலும் அவர்களின் நன்றிகெட்ட தனத்திற்குப் பரிகாரம் செய்யமாட்டாயா? என்சிநேகத்திற்குப் பதில் சிநேகம் காட்டமாட்டாயா" என்று இனிய எம்யேசு நம் ஒவ்வொருவரையும் மிகுந்தஉருக்கத்துடன் வேண்டுகின்றார்.

இந்த உருக்கமான வேண்டுதலுக்கிணங்கி இன்று யேசுவின் திருஇருதயப்பக்தி பரம்பி வருகின்றது. நிந்தைப்பரிகாரங்கள் பல ஒப்புக்கொடுக்கப்படுகின்றன பலகோடி ஆன்மாக்களால். திருஇருதயப்பத்தி என்றால் என்ன? சிநேகத்திற்குப் பதில் சிநேகம் காட்டுவதே; திருஇருதயப்பத்தியாகும். மனிதர்களைச் சிநேகிக்கும்படி யேசுவின் திருஇருதயத்தில் கொழுந்துவிட்டெரியும் தேவசிநேகத்தை அறிந்து ஆராதிப்பதில் இவ்விருதயப்பத்திஅடங்கியுள்ளது. இவ்விருதயப்பத்தியை நாம் உள்ளரங்கத்தில் அனுசரித்தால் காணாது; வெளியரங்கமாயும் நமது ஆராதனை வணக்கங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். நாம் பல வழிகளில் எம் சிநேகத்தை யேசுவின் திருஇருதயத்திற்கு வெளியரங்கமாய்க் காட்டக்கூடும்.

**1-வது ஆனி மாதத்தைத் திருஇருதய வணக்கமாசமாகக் கொண்டாடுவது:** வைகாசி மாதத்தை மாதாவின் மாதமாக எவ்வளவு பத்திபற்றுதலுடன் கொண்டாடுகின்றோமோ அவ்வளவு பத்திபற்றுதலுடன் திருஇருதய வணக்கமாதத்தைக் கொண்டாடுவது. இங்ஙனம் யேசுவின் திருஇருதயத்தின் மட்டிலுள்ள பத்திபற்றுதலை நாம் வெளியரங்கமாய்க் காட்டுவதினால், யேசுவின் திருஇருதயம் ஆறுதல் அடைகிறது. எம்மட்டில் பிரீதி கொள்ளுகின்றது. இத்திரு இருதய வணக்கமாசம் எல்லாக் கோவிற்பங்குகளிலும் தீவிரமாய் வளர்ந்து வருவதற்குக் காரணமாயிருந்தவள் ஒரு கன்னியாஸ்திரி. இவள் யேசுவின் திருஇருதயத்திற்கு மகிமை வருவிக்கக்கூடிய எதையாகிலும் செய்ய அதி ஆவலாயிருந்தவள். ஒருநாள் இவள் பத்தி உருக்கமாய்த் தேவநற்கருணை உட்கொண்டபோது இவள் உள்ளத்தில் ஒரு குரலொலி சப்திக்கலாயிற்று. அதாவது, தேவதாயாருக்கு ஸ்தோத்திரமாக ஒருமாதம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்க, யேசுவின் திருஇருதயத்திற்கு ஸ்தோத்திரமாக ஏன் ஒருமாதத்தை ஏற்படுத்தவில்லையென்று. இதை அவள் தன் சிரேஷ்ட தாயாருக்கு அறிவிக்க ஏற்கனவே யேசுவின் திருஇருதய சிநேகத்தால்பற்றி எரிந்த அத்தாயாரும் இச்சுப செய்தியைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டதுமன்றி, தப்பாமல் அனுகூலமாகுமென்று தைரிய வார்த்தையும் கூறினார்.

1835-ல் மேமாதம் 29-ந்திகதி தேவதாயாரின் திருநாளைக் கொண்டாடுவதற்காக வந்திருந்த பரீஸ்நகர் மேற்றிராணியாரின் உத்தரவுடன் ஆனிமாதத்தை யேசுவின் திருஇருதயத்திற்கென ஒப்புக்கொடுத்து யேசுவின் திருஇருதய வணக்கமாசத்தை ஆரம்பித்தனர். அன்றுதொட்டு இன்றுவரை இவ்விருதய வணக்கமாசப்பத்தி வேகமாகப் பரவிவருகின்றது

**2-வது முதல்வெள்ளி அனுசரிப்பு:** இம்முதல் வெள்ளி அனுசரிப்பு இன்று பெரிய திருநாட்கொண்டாட்டம்போல் கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்று திவ்வியவிருந்தருந்தி யேசுவின் திருஇருதயத்திற்கு நிந்தைப்பரிகாரம் செய்கின்றனர். விடாதுஒன்பது தலைவெள்ளிகளில் பூசைகண்டு நன்மை வாங்குவோருக்கு யேசுவின் திருஇருதயம் தப்பாத அடைக்கலமாயிருக்கும். "மாசத்தின் முதல் ஒன்பது வெள்ளிக்கிழமைகள் விடாது நன்மை வாங்குகிறவர்கள் சாகும்போது பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டுசாகும்வரத்தைஅளவில்லாப் பெலனுள்ள நமது இருதயம் அவர்கட்குக் கொடுக்குமென்று, நம்மிருதயத்திலுள்ள இரக்கமிகுதியால் வாக்குக் கொடுக்கின்றோம் இப்படிச் செய்பவர்கள் நமது சத்துருக்களாயாவது தேவதிரவியனுமானங்கள் இன்றியாவது சாகவேமாட்டார்கள். அவர்கள் சாகும்வேளையில் நமது இருதயம் அவர்களுக்குத் தப்பாத அடைக்கலமாயிருக்கும்" என்று யேசுவின் திருஇருதயம் வசனித்ததாகக் கூறுகின்றாள் அர்ச்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குரிய ஆயத்தங்கள்

## (2)

## சங்கக்கூட்டங்களின் நடைமுறை

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆரம்பஆயத்த விடயங்கள் எல்லா வற்றையும் பிரசித்தமாக்க முடியாதா கையால் சங்கத்தில் என்னென்ன விட யங்கள் ஆராயப்படுமென இப்பொழுது திட்டமாய்க் கூறுவது அசாத்தியம்.

ஆயினும் நிச்சயமான சிலதகவல் கள் உண்டு. சங்கம் வத்திக்கான் மாளிகையில்கூடும்; இரண்டாவது வத்திக்கான் சங்கமெனச் சரித்திரப் பெயர்பெறும். சங்கத்தின் உத்தி யோகமொழி லத்தின்; பேச்சில் இலகுவாயும் எழுத்தில் சொல்வழு வற்றநடையுள்ளது மாயுமிருக்கும் என்றார் திரு. தார்டினி. தனிஆராய்ச் சிக் கூட்டங்களில் பிறமொழிகளிற் பேசச்சந்தர்ப்ப மிருக்கும்.

சங்கம்கூடும் நாள் இன்னும் குறிக் கப்படவில்லை. 1961இன் இறுதியில் அல்லது 1962இன் ஆரம்பத்தில்சங் கம் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப் பட்டது. இப்பொழுது திகதி 1962இன் இறுதி, அல்லது 1963 என்றும் கூறப்படுகிறது. ஆரம்ப ஆயத் தங்கள் முடிவடைவதைப் பொறுத் தே, சங்கம்கூடும் திகதியும் குறிக்கப் படும். ஏனெனில், ஆயத்தவேலை சற்றேசிக்கலானது. தற்பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயங்களைக் கோவைப்படுத்துவது மாத்திரமன்று, அவைகளைப் பழைய தும் நடைமுறையிலிருப்பதுமான பாரம்பரிய வழக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஒற்றுமை தேடவேண்டி யிருக்கிறது. இதற்கு ஆழ்ந்த ஆராய்ச் சிதேவை. சங்கஅவை கூடுதல் பல நாட்களுக்கு நீடிக்காதெதன எண்ணப் படுகிறது. எனினும் இந்தக்கூற்றுக்கள் யாவும் உத்தேசக் கூற்றே என்பது மனதிலிருக்க வேண்டும்.

ஆயத்த ஆராய்ச்சி முடிந்ததும் விவா திக்க வேண்டிய விடயங்களைப் பரிசுத்த பிதாதாமே தெரிந்தெடுப்பார். எவ்வி டயங்கள் முக்கியத்துவம் பெறுமென இப்போது கூறமுடியாது. சங்கநோக் கங்களை மேல்வருமாறு தமது முதல் நிருபத்தில் குறிப்பிட்டார் பரிசுத்த பிதா: "நாம பொதுச்சங்கமொன் றைக் கூட்டும்கருத்தை வெளியிட் டோம். இச்சங்கத்திற்கு உலகின் எத்திசையிலுமிருந்து மேற்றிராணி மார்வந்து மதசம்பந்தமான முக்கியத் துவம்வாய்ந்த பிரச்சினைகளை ஆராய் வார்கள். கத்தோலிக்க விசுவாச வளர்ச்சி, கிறீஸ்துவமக்களின் ஒழுக்கத் தைச்சீரான பாதையில் இட்டுச்செல் லுதல், தற்கால நிலைபரத்துக்கும், தேவைகளுக்கும் ஏற்றமுறையில் திருச் சபையின் ஒழுங்குகளை மாற்றியமைத் தல்போன்ற விடயங்களே முக்கியத் துவம்பெறும். இச்சங்கக்கூட்டம் உண்மைக்கும், ஒற்றுமைக்கும், அன் புக்கும் அற்புதமானசாட்சியாகும். இந்த அப்போஸ்தொலிக்க ஸ்தானத் தைவிட்டுப் பிரிந்திருப்பவர்கள் இந்தச் சாட்சியத்தைக்கண்டு, கிறீஸ்துபரம பிதாவிடம் வேண்டிக்கொண்ட ஒற்று மையைத் தேடியடைய இதுவோர் அழைப்புஎன ஏற்றுக்கொள்வர் என் பதுஎமது நம்பிக்கை."

பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி யளிக்கையில், "கொள்கைகளல்ல செயல்முறையே திருச்சங்கத்தின் பிரதான ஆராய்ச்சியாயிருக்கும்" எனக் கூறினார் திரு. தார்டினிஆண் டவர். அதாவது ஆன்மவிசாரணை, திருவழிபாடு, ஒழுக்கம், வேதவிருத்தி போன்ற விடயங்கள்பற்றி தீர்க்காலோ சனை செய்யப்படும். வேதசாஸ்திர ஆராய்ச்சியும் இடம்பெறும் என்பதற் கையமில்லை. முதல் வத்திக்கான்சங் கம் பலவேதசாஸ்திரசிக்கல்களில் சில வற்றைத்தான் தீர்த்துவைத்தது என்பது யாவருமறிந்ததே. அதே ஆராய்ச்சியைத் தொடர்ந்து இச்சங் கம் நடாத்துமா? மிலான் அதிமேற் றிராணியார் திரு. மொந்தினி, "அப் படித்தொடர்ந்து ஆராயும்என எதிர் பார்க்கலாம்" எனக்கத்தோலிக்க சேவாசங்க மாநாட்டில் கூறினார்; ஏனெனில், அப்பொழுது எழுந்தபல பிரச்சினைகளுக்கு இன்னும் முடிவு நாம் காணவில்லை.

மேல்வரும் விடயங்கள் ஆராயப்பட லாம்: (1) திருச்சபையைப் பற்றிய கொள்கையும் தற்கால நாஸ்திககருத் துகள்பற்றி திருச்சபையின் தீர்ப்பும்; (2) ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பொங்கி யெழும் தேசாபிமானத்தினால் ஏற்பட் டிருக்கும் வேதவிருத்திப் பிரச்சினை கள்; (3) தொழில் நுட்ப அறிவு மிகுந்தயுகத்தில் கத்தோலிக்க விசுவா சத்தைப் பரப்புவது; (4) கிறீஸ்துவர் களின் தனித்த, சமுதாய ஒழுக்கங் களைப் புதுப்பிப்பதும், தற்காலத்தில் போக்குவரத்து, செய்திபரவும் சாத னங்களால் எழும்பிரச்சினைகளும்.

வேதசாஸ்திரக் குழுஒன்று ஏற்படுத் தியாயிற்று. முதல்வத்திக்கான் சங்கம் திருச்சபையைப்பற்றிச்செய்த வேத சாஸ்திரமுடிபுகள், நிர்ணயங்களைவிட இன்னும் அநேகம் உண்டு. வேதசாஸ் திரக்குழுவின் ஆய்வாளரில் அதிகமா னோர் திருச்சபை கிறீஸ்துவின்ஞானச் சரீரமாவது எப்படிஎன்ற ஆராய்ச்சி யில் நிபுணர். "கிறீஸ்துவின் ஞானச் சரீரம்" எனும் 12-ம்பத்திநாதரின் பொதுநிருபம் இவைகளிற் சிலவற்றை ஆராய்ந்து ஆழ்ந்தகருத்துத் தெரிவித் திருந்தாலும் அது வேதசத்தியப் பிர கடனம் அல்ல. பதார்த்தத்திரிபு, கிறீஸ்துவின் ஆட்தன்மை போன்ற விடயங்களும் ஆராயப்படலாம்.

இரண்டாம் லையனஸ் சங்கம் (1274), புளோறென்ஸ் சங்கம் (1438—1445) போன்று இச்சங்கமும் ஒற்றுமையை யுண்டாக்கும் சங்கமாகாது. ஏனெ னில், பிரிவினைச் சபைத்தலைவர்கள் இச்சங்கத்தில்பங்குபற்றமாட்டார்கள். எனினும், பிரிந்துபோனவர்கள் தாம் பலகாலமாயிருந்த 'சொந்தவீட்டிற்கு' வந்துசேருவதற்கு ஆவனசெய்யப் படும். இவ்விடயத்தில் அருளப்ப பாப்பரசர் அதிகநம்பிக்கை கொண் டிருக்கிறார். "திருச்சபையின் ஒற்று மைக்கு வந்துசேரும்படி உங்களை நாம் அன்புடன் அழைக்கும்பொழுது, ஒரு அந்நியருடைய வீட்டிற்கல்ல, உங்கள் சொந்தவீட்டிற்கு, எல்லோருடைய வும் பிதாவின் வீட்டிற்கே அழைக்கி றோம் எனக்கருதும்படி நாம் வேண்டு கிறோம்" எனப் பரிசுத்த பிதா தமது முதல் நிருபத்திற் கூறியது குறிப்பிடற் பாலது.

லத்தின் திருவழிபாட்டில் இப் பொழுது நடைமுறையிலிருக்கும் முறையில் பெரியமாற்றங்கள் ஏற்படா. திருவழிபாட்டுச் சீர்திருத்தத்தில் அடிப்படைக்கொள்கை யாதெனச் சங் கப்பிதாக்களுக்குத் தெரிவிக்கப்படும். அக்கொள்கை என்னவெனக் கூறுவது எளிதல்ல. திருவழிபாட்டு மொழிப் பிரச்சினை ஆராயப்பட்டு, திட்டமான முடிவு செய்யப்படும் என்பதுநிச்சயம். குருமாரின் விரத்தத்துவக் கடமை பற்றித் திரும்பவும் சங்கத்தில் ஆராய இடமிராது என்பதும் நிச்சயம், குரு மாருடைய இந்தக்கடமையில் இழக் காரங் காட்டுவதுபற்றிப் பேச்செழுந்த தையிட்டுப் பரிசுத்தபிதா தமது மன வருத்தத்தைத்தெரிவித்து, இவ்விட யத்தைச் சங்க ஆராய்ச்சி விடய அட் டவணையிலிருந்து அகற்றிவிட்டார்.

### எமது கடமை

உலகமெங்குமுள்ள கத்தோலிக்கர் நடக்கவிருக்கும சங்கம்பற்றிக் கரிசனை கொள்ளவேண்டுமெனப் பரிசுத்தபிதா ஆரம்ப அறிக்கை விடுத்ததிலிருந்து கூறிவந்திருக்கிறார். கிறிஸ்துவ உலகம் எதிர்நோக்கும் நலன்கள்யாவும் கை கூடக் குருமாரும் கிறிஸ்தவர்களும் எப்படி ஒத்துழைக்கவேண்டும் எனவும் சுட்டியிருக்கிறார். றோமைக் குருமட மாணவருக்கு ஆற்றிய சொற்பொழி வில் (12-9-60) பரிசுத்தபிதா கேட்ட தாவது:

(1) செபம்: சங்கம் நடாத்துமா ராய்ச்சியிலும் உதவி செய்வதிலும் ஈடு பட்டிருக்கிறவர்களுக்குக் கிறிஸ்துவின் அருள் ஒளிதந்து ஊக்கந்தருமாறு ஆவலுடன் தனிச்செபமும் பொதுச் செபமுஞ் செய்தல்.

(2) ஆயத்த நிலைகளைப்பற்றி ஆர் வம்: குருமாரும் குருமாணவரும் சங்க விடயங்களைப் படித்துவரல்; விசுவாசிகள் இவ்விடயங்களைச் சார்ந்த வேதசத்திய சரித்திரங்களை ஆராய்ந் தறிதல். சங்கத்தைச் சுபாவத்துக்கு மேலானகருத்துடன் நோக்குதல்; ஏனெனில், இது அரசியல் மாநாடு அல்ல, மத, வைதீக விடயங்களைச் சார்ந்த பரிசுத்த சங்கம் என்க. இஸ் பிரீத்துசாந்துவானவருடைய திரு நாளுக்குமுன்வரும் நவதினங்களில் பொதுச்சங்கத்தின்சித்திக்காக விசேஷ வேண்டுதல் செய்யும்படி பரிசுத்த தந் தை அண்மையில் விடுத்த ஒரு நிருப மூலம் கேட்டுள்ளார்.

---

மார்கரீத் மரியம்மாள். அநேகபத்தி யுள்ள ஆன்மாக்கள், ஒன்பது தலை வெள்ளிகளில் மாத்திரமல்ல, எல் லாத் தலைவெள்ளிகளிலும் தப்பாது திவ்விய பூசைகண்டு, திவ்வியவிருந்து அருந்துகின்றனர்.

**3-வது குடும்பங்களில் திருஇருதய அரசாட்சி:** கிறிஸ்துநாதருடைய அரசஉரிமை அங்கீகரிப்பதே மக்கள் காப்பாற்றப்படுவதற்கான நிச்சய வழி என்கிறார் பரிசுத்த பாப்பரசர் 12-ம்பத்திநாதர். எந்தெந்த வீடு களில் நமது இருதயப்படத்தை வைத்துச் சங்கிப்பார்களோ, அந்தந் தவீடுகளை ஆசீர்வதிப்போம்" என்று யேசுவின் திருஇருதயம் அர்ச். மார் கரீத் மரியம்மாளுக்கு வாக்குப்பண் ணிற்று. திருஇருதயப்படத்தை நமது இல்லங்களில் ஸ்தாபிப்பதால் நாம் கிறிஸ்துநாதரை நம் அரசரா கவும், தலைவராகவும் ஏற்றுக்கொள் ளுகிறோம் எல்லோரும் காணக் கூடிய, மையமான இடத்தில் திரு இருதயப்படத்தை ஸ்தாபித்து, குடும்பத்திலுள்ள எல்லோரும் சூழ்ந்து செபிப்பது எத்தகைய மனோ ரம்மியமான காட்சி. இத்தகைய இல்லங்களும் அங்கு வசிப்போரும் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். ஆண்டவரின் ஆசீர்வாதத்தை அவர் கள் தம்மேல் நிரந்தரமாய்க் கொண் டிருப்பார்களன்றோ.

---

## இருளில் ஒளி

**— 10 —**

### "நீ கன்னியாஸ்திரியானால் நான் ஒரு குருவாவேன்"

**செல்வி ஆர். யோண்சன் எழுதுவது:**

சிலவருடங்கட்குமுன் காலஞ்சென்ற எனது அத்தை, சங். சகோ தரி றோசாலித்தா, சேத்தன் உயர்தர கலாசாலையின் அதிபராயிருந் தவள்.

அசாதாரணமான அழகும், அறிவும், பண்பும் ஒருங்கேயமைந்த அத்தையை இளவயதில் விவாகம் செய்துகொள்ள விரும்பினர் பல இளைஞர்கள். அவர்களுள் பிரதானமானவர் ஒரு புறொட்டஸ் தாந்த இளைஞர். நல்ல செல்வாக்குள்ளவர்.

ஒருநாள் அவ்வாலிபர் அத்தையை நேரடியாக அணுகித் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். தான் கன்னிகாமடத்தில் சேர விரும் புவதாக அத்தை பதிலளித்தாள். இதைக் கேட்ட அவ்வாலிபர், "நீ கன்னியாஸ்திரியாக வருவாயானால், யான் ஒரு குருவாக மாறு வேன்" எனக் கூறிச் சென்றுவிட்டார்.

பலவருடங்கள் கழிந்தன. சகோதரி றோசாலித்தா இப்போது சேத்தன் உயர்தர கலாசாலையின் அதிபர். வாயில் காக்கும் சிறுமி லிவிங்ஸ்ரன் என்ற பெயருள்ள குரவரொருவர் அதிபரைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தாள். வாயிற்படியண்டைசென்ற சகோ தரி றோசாலித்தா, முன்பு தன்னை மணந்துகொள்ள விரும்பிய புறொட்டஸ்தாந்த வாலிபரைக் குருவாகக் கண்டாள்.

ஆனந்தமும், அதிர்ச்சியும் அடைந்தாள் சகோதரி. "அறிவும், அழகும் நிரம்பிய நங்கையொருத்திக்கு இல்லறத்தில் பெறும் இன் பத்தைக்காட்டிலும் துறவறமே மேலாகத் தோன்றியது; அதுவே எனக்கும் வழிகாட்டுதல் எனக் கண்டேன்; கத்தோலிக்க மறையில் சேர்ந்தேன். துறவியாகவும் மாறினேன்" எனக் கூறிமுடித்தார் குரவர்.

தமிழாக்கம்: சா. பெ.

எதிர்பாருங்கள்!

**அண்ணியின் மதமாற்றம்**

இருளில் ஒளி இல. 11 இல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

இம்மாதம் 29-ம் நாள் திருச்சபை இருபெரும் அப்போஸ்தலர்களுடைய திருநாட்களைக் கொண்டாடுகின்றது. அர்ச். பேதுரு, பாவிலு அப்போஸ்தலர்களே இவர்களாவர். திருச்சபையின் முதல்தலைவர் — முதல் பாப்பு அர்ச். பேதுருவானவர். ரோமாபுரியிலே இவர் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு வேதசாட்சியாக மரித்தார். வேத விரோதியாய் இருந்த பாவிலு அப்போஸ்தலர், சவுல் என்று அழைக்கப்பட்டார். கிறிஸ்தவர்களைக் கொன்றுகுவித்த இவர் தேவ அருளினால் மனந்திருப்பப்பட்டார். கிறிஸ்துநாதரின் அப்போஸ்தலராக மாறினார். அவர் 14 நிருபங்களை எழுதியுள்ளார். அவை இன்றும் திருச்சபையில் நின்றிலங்கி, இன்றைய உலகுக்கு ஏற்றவையாகவும் அமைந்துள்ளன. இவ்வருடம் ரோமாபுரியில் அர்ச். பாவிலு அப்போஸ்தலர் முதல்முதல் இறங்கியதன் 19-ம் நூற்றாண்டு ஞாபக விழா கொண்டாடப்படுகிறது. தம்பி, தங்கையரே! நீங்கள் இந்த இரு அப்போஸ்தலர்களிடமும் இரண்டு வரங்களைக் கேளுங்கள். (1) திருச்சபை ஒற்றுமையடைய வேண்டுமென்றும், திருச்சபையில் சமாதானம் நிலவும்படியும், (2) வேதகலாபனைகள் ஒழியும்படியும், விசுவாசம் தழைத்தோங்கும்படியும்.

உங்கள் அன்புள்ள அண்ணா

## யூதாஸின் தோழன்

திருநாள், திருநாள் என்ற சப்தம் ஊரில் எங்கும் கேட்கின்றது. கோவில்கள், தெருக்கள் அலங்கரிக்கப்படுகின்றன. சனங்கள் திருநாளுக்குரிய அன்ன ஆகார வர்க்கங்களைச் சேகரிப்பதில் கருத்தாக இருக்கின்றனர். ஆனால், சிறுவன் செலஸ்தீன் மாத்திரம் திருநாளுக்கு உடை இல்லாததுபற்றி என்ன செய்வதென எண்ணி மனம் சோர்ந்து நின்றான். தந்தை இருந்தால் தனயனை இவ்விதம் தவிக்கவிடார். தரித்திரப்பட்ட தாயோ தன் புதல்வனின் துயரத்தை எவ்வாறு நிவர்த்திப்பதென ஏங்கிநின்றாள். சாப்பிட வகையின்றித் தட்டுமுட்டு, வஸ்திராபரணங்களை விற்று, ஈடுவைத்துப் பணம் பெற்றுச் சீவனம் செய்யும் தாய் எங்ஙனம் நல்லாடை தைத்து மைந்தனைச் சந்தோஷிப்பிக்க முடியும்? 'பெற்றமனம் பித்'தென்பர் மக்கள். என்ன செய்வது? தனயன் ஓர்புறம், தரித்திரம் மறுபுறம் அவளை அல்லற்படுத்தின.

"என்ன! ஏனைய சிறுவர் ஏற்ற உடை தரித்துக் கீர்த்தியாய்த் திரிய என் இனிய புதல்வன் மாத்திரம் பிறர் ஏளனஞ் செய்யத் தரித்திரனாய்த் தவிப்பதா? இல்லை, இல்லை. ஒருபோதும் இதற்கு நான் சம்மதியேன். எவ்வித கஷ்டப்பட்டும், பிச்சை எடுத்தாவது பிள்ளையின் ஆசையைப் பூர்த்தி செய்வேன்" என்று ஒருவாறு தெளிந்து எதையோ மனதில் கொண்டவளாய் வீட்டை விட்டு ஒரு யூத வீட்டை நோக்கி நடந்தாள்.

யூத வீட்டையடைந்து ஆசனத்திலிருந்த ஆஸ்திக்கார யூதனைப் பணிந்து, "ஐயா! நாளை நாம்கொண்டாடப்போகும் நற்கருணைத் திருநாள் கத்தோலிக்கருக்கோர் பெரிய நாள் என்பதை அறிந்திருப்பீர்கள்; இதனால் காட்சிகளையும், சனங்களின் ஆரவாரங்களையும் தாங்கள் அறியாமல் இருக்க முடியாது; ஆனால், ...... என்னையும், என் மகனையும் கவனியுங்கள்; பெருமானே! தயவுசெய்து எம்மீதிரங்கி நான் அடைவுவைத்த எமது திருநாள் வஸ்திரங்களைக் கொடுப்பீரானால் மிகவும் உபகாரமாயிருக்கும்; வேண்டுமானால், திருநாள் முடிந்த அன்றே அவைகளை உம்மிடம் திரும்பச் சேர்ப்பேன்; எமது எளிமைக்கிரங்கவேண்டும்" என்று அஞ்சலித்துக் கேட்டாள் அம்மாது.

'நற்கருணை' என்று கேட்டதும், அத் துஷ்ட யூதன் திவ்விய இரட்சகர் மீதுள்ள கொடும் பகையைத் தீர்க்க இதுவே சமயமென்று தீர்மானித்து, "நல்லது பெண்ணே! உன் ஆசைப்படி ஆடைகளைத் தருவேன்; ஆனால், நான் கேட்பது உன்னிடம் ஒன்றே ஒன்று; அது பணமுமல்ல, பொருளுமல்ல; ஆனால், நாளை நீ உட்கொள்ளப்போகும் நற்கருணையை என்னிடம் கொடு" என்று தந்திரமாய்க் கேட்டான். ஆனால், சம்மதிக்கப் பெண் திகைப்பதைக் கண்டு, "இதில் திகைப்பேன்? அட்ட தரித்திரமாய் நீயும், மகனும் கோவிலுக்குப் போனால் மற்றவர்களுக்கு இழிவாகக் காணப்படுவீர்களே; ஆனால், நான் கேட்ட பொருளைக் கொடுப்பாயாகில் நான் கொடுக்கும் ஆடைகளை நீங்கள் சொந்தமாகவே வைத்துக்கொள்ளலாம்" என்று யூதன் சொன்னான். இதைக்கேட்டு அப்பேதைப் பெண் மயங்கிவிட்டாள். தரித்திரத்தினால் வரும் நிந்தைகளைக் கவனித்தாளேயன்றி, தான் கட்டிக்கொள்ளப்போகும் தேவதுரோகம், தேவநிந்தை, முடிவற்றுநிற்கும் நரகவேதனை முதலியவற்றைக் கவனித்தாளில்லை. இதோ, யூதனுக்குச் சம்மதித்தாள்! யூதனும் சந்தோஷித்து வஸ்திரங்களையும், பணத்தையும் கொடுத்து அனுப்பினான்.

ஐயோ! சொல்ல நாவெழவில்லை. துரோகம்! பெருந்துரோகம்!! அடுத்தநாள் காலை திருநாட் பூசையில் நல்ல யேசுவைத் தேவதுரோகமாய் உட்கொண்டு, முன் யூதாஸ் யூதரிடம் முப்பது காசுக்கு ஆசைப்பட்டுக் காட்டிக்கொடுத்தது போல இன்று இப்படுபாவிப் பெண்ணும் நற்கருணையைக் கையளித்துக் காட்டிக்கொடுத்தாள். நிந்தைப் பரிகாரம் செய்யவேண்டிய அப் பெருநாளில் யூதன் வீட்டில் நிந்தையிலும் பெரும் நிந்தை செய்யப்படுகிறது. பரிசுத்த மன்னாவைக் கத்தியால் குத்தினான் அக்கொடிய பாதகன். ஆனால், அவன் குரோதம் தணிவதற்கில்லை. சற்பிரசாத நாதருக்கு அவசங்கை செய்யப்பட்ட இடத்தில் பாத்திரம் தண்ணீர் எங்கும் இரத்தம் காணப்பட்டது. பெரிய பாடுபட்ட உருவம் அவன் கண்முன் தோன்ற, நற்கருணை நாதர்—புதுமைகளின் தேவன் கைக்கெட்டாது அந்தரத்தில் தொங்கிநின்றார். இவைகளைக் கண்ட யூதன், திகில் அடைந்தவனாய்ப் பயம் மேலிட்டவனாய் வெளியே ஓடினான்.

இந்த இரகசிய விஷயம் யூதனின் மகனால் வெளிப்படுத்தப்பட, யூதனின் அடாத அக்கிரமச் செயல் அவனை நித்திய தண்டனைக்குமன்றி, அரசாங்க விசாரணையின் பின் இவ்வுலக தண்டனைக்கும் ஆளாக்கிவிட்டது. பின்பு தேவதுரோகியான யூதனின் வீடு தேவாலயமாக மாற்றப்பட்டு அந்நாள்முதல் இந்நாள் வரை அங்கே கத்தோலிக்கரால் நற்கருணை நாதருக்கு இடைவிடா நிந்தைப்பரிகாரம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பிள்ளைகளே! நற்கருணை நாதருக்கு எதிராகக் கட்டிக்கொள்ளப்படுகிற தேவதுரோகங்களுக்கு நீங்கள் அவருக்கு நிந்தைப்பரிகாரம்செய்ய முன்வாருங்கள். திவ்விய சற்பிரசாதத்தை அபாத்திரமாய்ப் பெற்றுத் தேவதுரோகம் கட்டிக்கொள்ளாதேயுங்கள். அதற்குப்பதிலாக அன்பின்தேவனாகிய யேசுநாதரைத் திவ்விய நற்கருணைமூலம் தகுந்த ஆயத்தத்தோடும், பயபக்தியோடும் பெற்று அவருடைய அன்பையும், அருளையும், ஆசிரையும் அடைந்துகொள்ளுங்கள்.


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2628

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நல்லூர் யாழ்ப்பாணம்.
1. கனகசபாபதி தனபாலசிங்கமும்
2. பெண் தேம்பமலரும்

— வழக்காளிகள்.

எதிராக
1. அப்பாத்துரை சிவகுருநாதனும்
2. பெண் அன்னம்மாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2628-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1961-ம்ஸ்ரு ஆடிஆ 29-ந்வ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 14,477/77-ம். ரூபா 10,000-த்திற்கு 5-1-59 தொடக்கம் 1-3-60வரை 8வீதமானவட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும், கோட்டுச்செலவு 446ரூபா 57சதமும்.

**காணிகளின் விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்கு கோப்பாய்கோவில்பற்று, உரும்பிராய்இறை "கேசல்" பர. நில. இலா. நாலும், $\frac{5}{8}$குளியும் (ப. நி. இ. 4, குளி $\frac{5}{8}$), வீடும், வடக்கில் இருக்கும் கிணற்றில் பங்குரிமையும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கும், தெற்கும் — ஒழுங்கை. வடக்கு — கீழ்சொல்லிய ஆதனம். மேற்கு — காலம்சென்ற மயில்வாகனம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம். இதடங்கலும்.

2. ஷெஇறை கேசல் நில. இலா. மூன்றும், குளி முக்காலும் (நி. இ. 3 குளி$\frac{3}{4}$). தெற்கு — எல்லை. கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — வைத்திலிங்கம் கந்தையாவிற்கும், பங்காளருக்கும்உரிய ஆதனம். மேற்கு — காலஞ்சென்ற மயில்வாகனம் பெண் தங்கத்தினுதனம். தெற்கு — இதில்சொல்லிய முதல்ஆதனம். இதில் சொரியலாய் நிலப்பரப்பு ஒன்றும், குளி பதினறரையும் (நில. பர. 1, குளி$16\frac{1}{2}$. இதடங்கலும்.

**செ. விசாகரெத்தினம்,**

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,

1961-ம்ஸ்ரு ஆனிமீ 20-ந் திகதி.

133, பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.


### சிறுவர் அறிவுச் சக்கரம்—4

சரியான விடைகள்

— I —

1. அர்ச். மத்தேயு
2. அர்ச். லூக்கா
3. அர்ச். பெர்னாட்
4. அர்ச். "மிக்கேல்"
5. அர்ச். அகுஸ்தீனார்
6. அர்ச். சின்னப்பர்
7. அர்ச். சின்னத்திரேசம்மாள்.

— II —

1. மண்ணால் உண்டாக்கப்பட்டவன்
2. எல்லா மானிடர்க்கும் தாய்
3. நீதியின் அரசர்
4. ஆயர்களின் ஆயர்
5. கடவுளுடன் போராடியவர்
6. தண்ணீரில் இருந்து இரட்சிக்கப்பட்டவர்
7. தேவனின் மருந்து
8. தேவ வல்லபம்.

இம்முறை ஒருவரும் சரியான விடைகளை எழுதவில்லை. மூன்று பிழைகளுடன் விடைகள் அனுப்பியவர்:

1. சூ. ரோசலீன் — ரோ. க. த. பெ. பாடசாலை, இளவாலை.

ஐந்து பிழைகளுடன் விடை அனுப்பியவர்கள்:

1. எசபியூஸ் பர்னாந்து, 34, சந்தலூசியா லேன், கொழும்பு.
2. அ. யுவானிஸ், நம். 50, D 8, உருத்திரபுரம்.
3. அ. பிரான்சிஸ்கா, ரோ. க. த. பெ. பாடசாலை, இளவாலை.
4. அ. அன்னமேரி, ரோ. க. த. பெ. பாடசாலை, இளவாலை.

### மோல்தாவில் மிண்டோவிற்கு எதிர்ப்பு

கம்யூனிஸ்ட் ஆட்சியைப் புகுத்த மிண்டோவ் பெரும் முயற்சி செய்து வருகிறார். சுதந்திர ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் அவரை எதிர்த்து நிற்கின்றனர். ஆதலால், 10 நாட்களுக்குமுன் 3,000 ஆதரவாளர்களுடன் அவர் கோலோ என்ற ஒரு தீவில் பிரசாரம் செய்யவந்தபோது, மக்கள் கற்களையும் கண்ணாடிப் புட்டிகளையும் அவர்கள் மீது எறிந்தனர்; அவர் பேசுவது எவருக்கும் கேட்காதிருக்கும்படி கூச்சல் போட்டனர். கோவில் மணிகளைக் காதுகிழிய அடித்தனர். இறுதியில் சற்று அமைதி ஏற்பட்டவுடன், அவர் அதிமேற்றிராணியார் கோன்ஸி ஆண்டகையைத் தாக்கிப்பேச முற்பட்டார்; உடனே மக்கள் சுற்றுப் புறத்திலுள்ள வீட்டுமுகப்புகளில் நின்றுகொண்டு அவரைப் பரிகசித்துக் கூச்சலிட்டனர். கூட்டம் முடிந்து வீடு திரும்ப அவரும், அவரது சகாக்களும் புறப்பட்டபோது அவர்களை ஏற்றிச் செல்ல பஸ்கள் மறுத்துவிட்டன; 2 மைல் தூரம் கால் நடையாகச் சென்று வீடுசேர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும்செய்தி

## திருஇருதய மகிமைக் காப்பாளர் சங்கம்

இப்பங்கில் திருஇருதய ஸ்தாபகத்தைப் பரப்பும் நோக்குடன், விவாகமான ஆண்பாலாரால் இச்சங்கம் நடைபெறுகிறது. சபையின் பாதுகாவலர் திருநாளின் ஆயத்தமாகக் கடந்த சனிக்கிழமை வண. ஜே. ரி. லினகன், சே. ச., சுவாமியவர்கள் தலைமையில் வண. கட்டளைச்சுவாமி, வண. எல். ஏ. லோறியோ சே. ச. சுவாமி ஆகியோர் துணைபுரிய மாலை ஆராதனையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெற்றது. ஞாயிறுதினம் பாடற்பூசையும், சபையின் வருடாந்த விழாவும் நடைபெற்றது. கீழுள்ளோர் நிர்வாக சபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. பிரான்சீஸ் யோசேப், துணைத்தலைவர் திரு. லோறன்ஸ் பெர்ணண்டோ, செயலாளர் திரு. எஸ். ஈ. அந்தோனி, உதவிச் செயலாளர் திரு. எம்.சந்தியாப்பிள்ளை, நிதியாளர் திரு. வி. மாற்கு, மற்றும் ஆறு அங்கத்தினர் ஆலோசகர்களாகத் தெரியப்பட்டனர். தொடர்ந்து சமூகப் பொழுதுபோக்குடன் விழா நிறைவானது.

* * *

அகில உலக

## மரியாயின் மைந்தர் சபைத்தினம்

மட்டக்களப்பு பிராந்தியத்தைச் சேர்ந்த 18 மரியாயின் மைந்தர் சபைகளின் வருடாந்த தினம் வைகாசித் திங்கள் 28-ம் நாள், மட்டக்களப்பு அர்ச். மரியாயின் ஆலய பங்கு மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. பிராந்தியத் தலைவர் வண. எவ். எக்ஸ். மேயர் சே. ச, சுவாமியவர்களால் "சமீப காலத்தில் தென் அமெரிக்காவில் ஆரம்பமான அகில உலக மரியாயின் மைந்தர் சபைத்தினக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம்" என்னும் விடயம்பற்றி அறிவுரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து திரு. சைமன் பெர்ணண்டோ அவர்களால் "திருச்சபைப் பொதுச்சங்கம்" பற்றிவிளக்கப்பட்டது.

திரிகோணமலைமேற்றிராசன நல்லாயர் மகாவந். கிளெனி, சே. ச. ஆண்டவர் அவர்களால் திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அப்போது "மரியாயின் மைந்தர்சபையின் மகத்துவம்" என்பதுபற்றி அரியதோர் பிரசங்கமும் நடைபெற்றது. தாண்டவன்வெளி, புளியந்தீவுப் பங்குகளுக்கு ஐந்து புதிய அங்கத்தினர் சேர்க்கப்பட்டனர். பூசையின்பின் அங்கத்தினர் அனைவோரும் தங்கள் வாக்குத்தத் தங்களைப்புதுப்பித்து உலக இராக்கினியை வாயார மனமார வாழ்த்தினர்.

* * *

இளவாலை

சந்தியோகுமையோர் கோவிலில்

## தேவநற்கருணைத் திருநாள்

திவ்விய நற்கருணைத்திருநாள் நிகழ் ஆனிமாதம் 11-ந்திகதி ஞாயிறுவாரம் நமது ஆலயத்திலே மிகவும் பத்தியருட்சிக்குரியவிதமாகக் கொண்டாடப்பட்டது. அன்றுதினம் 18 சிறுவர் சிறுமியருக்கு முதல்நன்மை அருளப்படலாயிற்று.

காலை 7-30 மணியளவில் சம்பத்திரிசியார் கல்லூரியைச்சேர்ந்த வண. பிதா மைக்கேல் யேசேப் திவ்விய பூசைப்பலி நிறைவேற்ற, யாழ்ப்பாணம் சந்தியோகுமையோர் கோவிற் கட்டளைக்குரவர் வண. பிதா சார்லே, கட்டளைக்குரவர் வண. பிதா டிவிற் சகிதம்துணைபுரியப் பெரியபாடற்பூசை நிறைவேறியது. பூசைப்பலி நேரத்திலே வண. பிதா மைக்கேல் யோசேப் "உலக முடிவு பரியந்தம் உங்களோடு இருப்பேன்" என்னும் யேசுநாதரின் திருவாக்கியத்தைத் தலைப்பாகக் கொண்டு ஓர் அரியபிரசங்கம் நிகழ்த்தினார். பூசை முடிவில் திவ்விய நற்கருணை ஆராதனைக்கென எழுந்தேற்றம்செய்து வைக்கப்பட்டிருந்தது. பகல்முழுவதும் ஆராதனை இளவாலைக் மடக் கன்னியர்களாலும், மரியாயின் சேனையாராலும் முறையே நடாத்தப்பட்டது.

பிற்பகல் 3-30 மணியளவில் ஓர் பொதுத் திருமணித்தியாலம் நடைபெற்றது. திருமணித்தியால முடிவில் வண. பிதா சார்லே திவ்வியநற்கருணை நாதரைத் தாங்கிச்செல்ல, வண. பிதா மைக்கேல் யோசேப், வண. பிதா கோமஸ், வண. கட்டளைக்குரவர் துணைபுரிய, ஆலயத்தைச்சுற்றி அலங்கரிக்கப்பட்ட பாதைவழியாய்ப் பக்தர் குழாம் பாக்களுடன் பவனிவந்து, ஈற்றில வண பிதா கோமஸ் அவர்களால் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

அன்றுகாலை முதல்நன்மை பெற்ற சிறுவர் சிறமியருக்கு உத்தரீயம் அளித்ததுடன் திருநாள் இனிதே முடிவுற்றது.

— நிருபர்

* * *

## வவுனியாத் தபால்

வவுனியாவைச்சேர்ந்த இறம்பைக்குளத்திலே கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் கோடி அற்புதரும், வறியவர்களின் அன்னதாதாவுமான அர்ச். அந்தோனியாரின் வருஷாந்த உற்சவம் சென்ற 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை பத்திச்சிறப்புடன் கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு ஆயத்தமான நவநாட்கள் நிகழ்மதி 2-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் காலை திவ்விய பூசையுடனும், மாலையில் செபமாலை, பிரசங்கம், திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் நடந்துவாலாயிற்று. மின்வெளிச்சங்களும், மலர்மாலைகளும் ஆலயத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தன. நவநாட்களின் இறுதியான ஆறுநாட்களிலும் மட்டக்களப்பைச்சேர்ந்த வண. ரி. செல்வராஜா சுவாமியவர்களால் மகாஞானஒடுக்கம் ஒன்று நடாத்தப்பட்டது. அன்னாரின் அமிர்தபிரசங்கங்கள், திருமணித்தியாலப் பத்திமுயற்சிகள் யாவர் உள்ளங்களையும் தட்டி அருட்டிவிட்டன.

எங்கள் பாதுகாவலரின் திருநாளுக்கு முந்தியநாளாகிய 12-ந் திகதி திங்கட்கிழமை காலை வண. கட்டளைக்குரவர் அவர்களால் திவ்வியபாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. அன்றுமாலை 4-30 மணியானதும் வவுனியா, பெரிய கோமரசங்குளம், இளமருதங்குளம், பறநட்டகல், சேமமடு, பத்திமாகிரி, இராசேந்திரங்குளம், பாவற்குளம் முதலாம் பங்குகளைச்சேர்ந்த கத்தோலிக்கர் ஒன்றுகூடவே, மாலைஆராதனை பாடப்பட்டதும் வண. கட்டளைக்குரவரும், வண. ரி. செல்வராஜா சுவாமியார் அவர்களும் துணைபுரிய, வண. பி. தேவராஜா சுவாமியார் திவ்வியநற்கருணைப் பாத்திரத்தைக் காத்தேந்தினர். பள்ளிச்சிறுரும், பத்திக் கூட்டத்தைச் சேர்ந்தோரும், மற்றும் விசுவாசிகளும், சங். கன்னியாஸ்திரிமாரும் செபங்களோதி முன்செல்ல, பாடகர் குழாம் கீதங்கள் பாடிவர, பூசைப் பரிசாரகர் புடைசூழ, அலங்கார வீதியூடே நிலபாவாடைமீது நற்கருணை நாதர் பவனிவரலாயினர்.

வீதியின் இரு இடங்களில் முறையே மரியாயின் சேனையாளராலும், கத்தோலிக்க சேவாசங்கத்தினராலும் சிங்காரிக்கப்பட்டிருந்த பந்தர்களில் நற்கருணை ஆசீர்வாதங் கொடுபடலாயிற்று. இறுதியில் கோவில் முன்றிலில் பள்ளிப்பிள்ளைகளாலும், ஆசிரியர்களாலும், சங். கன்னியாஸ்திரிமாராலும் மின்வெளிச்சங்கள், மலர்கள், துவசங்கள் கொண்டு சிங்காரிக்கப்பட்டிருந்த லூர்துகெபியின்பீடத்தில் நற்கருணைநாதனை எழுந்தருளச்செய்து 'தெதேயும்' என்ற தோத்திரப் பாடலுடன் நற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது.

திருநாள்தினமாகிய மறுநாட்காலை 7 மணிக்குப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் கோடி அற்புதரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும், திருச்சுரூப ஆசீர்வாதத்துடனும் திருநாள் இனிதுநிறைவேறியது. நவதின ஆராதனைகளும், மகா ஞானஒடுக்கம், தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம், அர்ச். அந்தோனியார் திருநாள் சகலமும் பத்திச்சிறப்புடனும், அமரிக்கையுடனும் கொண்டாடிய சகலருக்கும் வண. கட்டளைக்குரவர் நன்றி கூறினர்.

— நிருபர்

# கத்தோலிக்க செய்திகள்

## அமெரிக்காவில் கத்தோலிக்கர்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (யு. எஸ். ஏ.) மொத்த மக்கட் தொகை 17,93,19,682. இதில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை 4,21,04,900. கடந்த ஒருவருடத்தில் மட்டும கத்தோலிக்கர் தொகையில் ஏற்பட்டுள்ள விருத்தி: 12,33,598. (3·09%); அதே கால அளவில் மொத்தமக்கட் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 41%. சென்ற பத்து ஆண்டுகளில் கத்தோலிக்கரின் தொகை: 47·04%, மொத்த மக்கட்தொகை 17·15% அதிகரித்துள்ளது.

சென்ற ஆண்டில் 1,36,953 பேர் மனந்திரும்பி, கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துள்ளனர்.

நாட்டில் உள்ள

| | |
|---|---|
| கருதினல்கள் ... | 5 |
| அதிமேற்றிராணிமார்கள்... | 30 |
| மேற்றிராணிமார்கள் ... | 185 |
| அதிமேற்றிராசனங்கள் ... | 26 |
| மேற்றிராசனங்கள் ... | 115 |
| பங்குகள் ... ... | 16,996 |
| குருக்கள் ... ... | 54,682 |
| சகோதரர் ... ... | 10,928 |
| கன்னியர் ... ... | 170,438 |

சிக்காகோ போன்ற எட்டு மேற்றிராசனங்களில் 10 இலட்சத்துக்குமேற்பட்ட கத்தோலிக்கர் உள்ளனர்.

மொத்தம் 54,682 குருக்கள் இருந்தும், நாட்டிலுள்ள 16,996 பங்குகளுள் 508 பங்குகளை நேரிடையாகக் கண்காணிக்கத் தனிப்பட்ட குருக்கள் இல்லை.

## பொறியியல் வல்லுநர்க்கு அர்ச்சியசிட்ட பட்டம்

"ஒப்புஸ் தேயி" என்ற சபையைச் சேர்ந்த ஒரு பொறியியல் வல்லுநர்க்கு (எஞ்சினியர்) அர்ச்சியசிட்ட பட்டம் அளித்தற்கான மேற்றிராசன ஆராய்ச்சிகள் முடிவடைந்துவிட்டன. மாட்ரிட் மேற்றிராசனத் தலைவர் இவ்வாராய்ச்சி முடிவுகளை ரோமைக்கு அனுப்பியுள்ளார். 1943-ல் தமது 40-வது வயதில் இறந்த இஸிதோரோ ஸோர்ஸாறு வேதஸ்மா என்ற அப்பொறியியல் வல்லுநர் றெயில்பாதை அமைக்கும் அலுவலில் ஈடுபட்டிருந்தவர். ஒழுங்காக உழைத்து, உத்தமராக வாழ்ந்து மரித்தவர்.

## ஸ்பெயினில் வீடு கட்டும் திருப்பணி

ஸ்பெயினில் குடிமக்களுள் நூற்றுக்கு 35 பேருக்கு, தமக்கு வேண்டிய குடிவசதி செய்து கொள்வதற்கான வருவாய் கிடையாது. மேலும், சில ஆண்டுகட்குமுன் நடந்த உள்நாட்டுக் கலகத்தில் 300,000 வீடுகள் அழிந்துவிட்டன. ஆண்டுதோறும் 252,000 திருமணங்கள் நடைபெறுகின்றன. புதுத்தம்பதிகள் தனித்துச் சென்றுவாழ, சொந்த வீடுகள் இல்லை. பாதிப்பேருக்குமேல் வாடகை வீடுகளுக்குத்தான செல்கின்றனர். ஆண்டுதோறும் சுமார் 150,000 புது வீடுகள் தேவைப்படுகின்றன. ஆனல், 98,000 வீடுகள்தான் கட்டப்படுகின்றன. இதனல் ஏற்படும் நெருக்கடியை மேற்கொள்ள, நாட்டிலுள்ள மேற்றிராசனங்கள் யாவும், கடந்த 15 வருடங்களாக, ஒரு தீவிர அப்போஸ்தலத்துவத்தில் இறங்கி வேலைசெய்து வருகின்றன, வீடுகட்டுவோரின் கூட்டுறவுச் சங்கங்கள், நிறுவி, இதுவரை 48 மேற்றிராசனங்களில் 25,000 இல்லங்கள் அமைத்துள்ளன. இன்னும் 7,000 வீடுகள் விரைவில் கட்டி முடிவுறும். வேறு 17,000 வீடுகள் கட்ட விரைவில் வேலை ஆரம்பமாகும். இவ்வாறு மேற்றிராசன ஆதரவில் வீடுகள் அமைக்க அரசினரும் பொருளுதவி செய்கின்றனர்.

## முரட்டுத்தனமுள்ள கப்பலோட்டியின் நன்றி

கோப்பன்கேகனில் உள்ள புனித சூசையப்பர் வைத்தியசாலைக்கு முரட்டுத்தனமும் கொரோமும் நிறைந்த பிறசமயத்தவனை கப்பலோட்டி ஒருவன் கொண்டுவரப்பட்டான். அவன் அந்த வைத்தியசாலையில் இருக்கும்போது அவனுடைய குடும்பத்தினர் அவனைப் பார்ப்பதற்காக அங்குவந்தனர். அவர்களைக்கண்டதும் அவன் உரத்தசத்தம் வைத்து அவர்களை அதட்டினன். அப்போது சங். ஸிஸ்டர் பெயோடொரு உள்ளே நுழைந்தார். கர்ச்சிக்கும் சிங்கம் ஆட்டுக்குட்டியைப்போல சாந்தமாயிற்று. இந்தக் கப்பலோட்டி குணப்பட்டு வெளியேறி இரண்டு மூன்று மாதங்கள் சென்றன. அன்றொரு நாள் இவன் திராம்வண்டியொன்றில் பிரயாணஞ்செய்தசமயம் அதேவண்டியில் பிரயாணஞ்செய்த மேற்படி வைத்தியசாலையைச் சேர்ந்த இரு கன்னியாஸ்திரிமாரைக்கண்டு அவர்கட்கு அதிகம் மரியாதைசெய்தான். கையில் நீளமாய் அணிந்திருந்த சேட்டை மேலே ஒதுக்கித் தன துகையை உயர்த்திச் சுட்டிக்காட்டி என்னை அவவுக்கு ஞாபகப்படுத்துங்கள் என்றான். அவனது கையில் பெரிய நீல எழுத்துக்களால் "ஸிஸ்றர் பெயோடொரு" என்ற பெயர் எழுதப்பட்டிருந்தன.

### "மனப்பூர்வமாக மன்னிக்கிறோம்"

போலந்தில் திவ்விய நற்கருணைத் திருநாளன்று கர்தினல் விஷின்ஸ்கி ஆண்டகையவர்கள் 125,000 பேர் கொண்ட கூட்டத்தில் பேசுகையில் கம்யூனிஸ்ட் தலைவர்கட்காக வேண்டிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திவ்விய நற்கருணைத் திருநாளுக்குப் பின்வரும் வாரத்தில் போலந்தில் சில பவனிகள் நடைபெறுவது பாரம்பரை வழக்கம் [illegible] அம்பவனிகளுக்குக் கம்யூனிஸ்ட் அரசினர் இவ்வாண்டு தடைவிதித்துள்ளனர். இவ்வாறு அவர்கள் புரிந்த [illegible]க்கைப் பொருட்படுத்தாது அவர்க[illegible] மனப்பூர்வமாக மன்னித்து, அ[illegible]கட்காக இறைவனிடம் மன்றாடுமாறு[illegible] ஆண்டகை சொற்பொழிவா[illegible]னார். இறுதியாக, "மனப்பூர்வமா[illegible] மன்னிக்கிறோம்" என்று அவர் [illegible]க மக்கட்திரளும் அவ்வாறு ச[illegible]த்து எதிரொலி எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

— நமது நிருபர் அமலன்

● பாதுகாவலன் பத்திராசிரியர் ● பாப்பரசரின் கௌரவங்கள் ● இல்லற அப்போஸ்தலர்
● சினிமா விநியோகத்தில் கன்னியர் ● முஸ்லீம்மாதின் கத்தோலிக்க உபதேசம் ● வத்திக்கானின் தொண்டு

நிர்மலா: பாதுகாவலன் பத்திராசிரியரின் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்றீர்களே. எப்படிவிழா?

அப்பா: நல்ல ஜனக்கூட்டம். மேற்றிராணியார் தங்கப் பதக்கத்தை ஆசீர்வதித்துப் பத்திராசிரியருக்கு அணிவித்தார். பின்னர் பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெற்றது.

அகஸ்ரீன்: கடந்த நாற்பதுவருடகாலமாக இவர் தொண்டாற்றி வருகிறாரல்லவா!

அப்பா: பத்திராதிபரை நல்லாய் அறிவேன். செபமாலை இவரது ஆயுதம். தானே நடந்து வழிகாட்டுவது அவரது கொள்கை. நல்ல எழுத்தாளர். பேச்சாளர். இன்றைய முற்போக்காளர்கட்கு இவரது எழுத்து நடை சிறிது கசந்தபோதிலும், இலக்கண மரபுநெறி வழுவாது சொல்லலங்காரத்துடன் தமிழ்நடையில் எழுத இன்று நம் கத்தோலிக்கரிடையே இவருக்கு நிகர் யாருமில்லை.

பெரியண்ணு: 'பத்திராசிரியரின் கையிலுள்ள பேனு, போர்வீரனின் வாளிலும் வல்லமையுள்ளது' என்பது முதுமொழி. இந்த அணுக்குண்டு சகாப்தத்தில் வீரத்தின் மதிப்பும் குறைந்துவிட்டது. ஆயின் பத்திராசிரியரின் பேனுவுக்கு உலகம் உள்ளளவும் மதிப்பும் வன்மையும் உண்டு. இதையறிந்துதான் இரும்புத்திரை நாடுகள் பத்திரிகைகளைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருக்கின்றன.

அகஸ்ரீன்: பத்திராசிரியர் நினைத்தால் ஒரு பெரிய புரட்சியையே சிருஷ்டிக்கமுடியும். பொய்யை மெய்யாக்க இயலும். எனவே நம் கத்தோலிக்க பத்திராதிபர்களின் பொறுப்பு மகத்தானது. திருச்சபையின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் தூதர்களாக அவர்கள் விளங்கவேண்டும். நம்பத்திராதிபர் இந்நெறி தவருதவர். எனவே திருச்சபையின் கௌரவத்துக்கு உரித்தாகினர்.

அன்ரன்: ஏன் திருச்சபை இவ்விதம் சிலரைக்கௌரவிக்கிறது?

பெரியண்ணு: தங்கள் நாட்டுக்காக, சாகித்தியத்துக்காக, மொழிக்காக அருஞ்சேவையாற்றியவர்களை எப்போதும் கௌரவிக்கவேண்டியது கடமையாகும். அறிவு ஆராய்ச்சித் துறைகளில் வல்லுனருக்குநோபல் பரிசு வழங்கப்படுகிறது. அமெரிக்காவில் சிறந்த இலக்கியங்களைப்படைப்பவர்கட்குப் புலிச்சர் பரிசும், சிறந்த சினிமாப்படங்கட்கு ஒஸ்கார் பரிசும் கொடுக்கிறார்கள். மற்றைய நாடுகளும் இவ்விதமே அருந்தொண்டாற்றியவர்களைக்கௌரவித்து அவர்கள் சேவையைப்பாராட்டுகின்றன. சத்தியதிருச்சபையும் தன்மக்களுக்காகவும், பாப்பரசருக்காகவும், திருச்சபையின் நலனுக்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் தொண்டாற்றியவர்களை இவ்விதமே கௌரவப்படுத்துகின்றது

நிர்மலா: இலங்கை சுதந்திரமடையுமுன் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பிரிவி கவுன்சலர், சேர், முதலியார் முதலிய பட்டங்கள் வழங்கப்பட்டன. அதுபோல பாப்பரசர் வழங்கும் பட்டங்களிலும் வெவ்வேறு தாங்கள் உண்டா?

அகஸ்ரீன்: ஆம். பாப்பரசர் வழங்கும் பிரதான கௌரவங்களை ஒன்பது பிரிவில் அடக்கியுள்ளனர். ஆகக்குறைந்த அந்தஸ்திலுள்ளது பெனமென்றி மெடல் எனப்படும் நற்தகுதிப் பட்டம். ஆகக்கூடியது சுபிரீம் ஓடர் ஒவ் கிறைஸ்ற் எனப்படும் கிறிஸ்துவின் முதன்மையணி.

அஞ்சலா: யார்யாருக்கு எவ்வெக் காரணங்களால் இந்தக் கௌரவங்கள் வழங்கப்படுகின்றன.

அகஸ்ரீன்: கிறிஸ்துவின் முதன்மையணி கத்தோலிக்க அரசர்கள், தேசங்களின் முதல்வர்கள், பிரதமர், ஜனுதிபதிகள் ஆகியோருக்கே வழங்கப்படலாம். 1319-ம்ஆண்டு 22-ம்அருளப்ப பாப்பரசர் கத்தோலிக்க தேசமுதல்வர்களைக் கௌரவிக்குமுகமாக இக்கௌரவத்தை ஏற்படுத்தினர். இப்பதவிக்கெனத் தனிஉடையுமுண்டு. அதன்மேல் கழுத்திலிருந்து இடுப்புவரை அரசர்கள் அணிவது போன்ற கழுத்துப்பட்டியில் தங்கத்தாலாய வெண்ணிறச் சிலுவை, மகுடம், யுத்த சின்னங்கள் முதலியவைதொங்கவிடப்படும். பொற்றூண்டுகோல் கௌரவ அணி இரண்டாவது இடத்திலுள்ளது. இக்கௌரவம் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டதால் இதை வழங்குவதை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. 1905-ல் அர்ச். பத்தாம்பத்திநாத தந்தை இதைப்புதுப்பித்தார். யுத்தமுனையில் அல்லது பேனுமுனையில் திருச்சபையின் நலஉரிமைகளைப்பாதுகாப்போருக்கு அளிக்கப்படுகிறது. கத்தோலிக்கரல்லாதவரும் இக்கௌரவத்தைப்பெறலாம். தனி உடையுடன் தங்கச்சிலுவையில் வெண்ணிறப்பதக்கமும் வழங்கப்படும். பதக்கத்தில் தேவஅன்னையின் உருவம் பதிக்கப்பட்டுளது. மூன்ருவதாக 9-ம்பத்திநாதரின் கௌரவ அணி இடம்பெறுகிறது. 1847-ம்ஆண்டில் ஒன்பதாம் பத்திநாத பாப்பரசர் இக்கௌரவத்தை முதலில் வழங்கினர். திருச்சபைக்காகக் குறிப்பிடத்தக்க சேவைசெய்தவர்கட்கு இக்கௌரவம் வழங்கப்படுகிறது. தனி உடையும் பதக்கங்களும் உண்டு.

கார்மெலா: செவாலியர் என நாம் அழைப்பவர்கள் இந்தப்பதவிக் குரியவர்களா?

பெரியண்ணு: இல்லை. செவாலியர்என அழைக்கப்படுபவர்கள் நான்காம் ஐந்தாம் கௌரவங்கட்குரியோர். நான்காவது, பெரியகிரகோரியாரின் கௌரவ அணி. கத்தோலிக்க பிரமுகர்கள், இராணுவவீரர்கள் என்போரைக்கௌரவிக்குமுகமாக 1837-ல் 16-ம் கிரகோரியாரால் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது, சில்வேஸ்தரின் கௌரவ அணி. 1841-ல் 16-ம் கிரகோரி பாப்புவால் ஏற்படுத்தப்பட்டது. இப்பதவிகட்குத் தனி உடையும் பதக்கங்களும் உண்டு. 1099-ல் முதலாவது சிலுவையுத்தகாலத்தில் திருக்கல்லறையின் கௌரவ அணி ஏற்பட்டது. அரசகுலத்தவர், கலைஞர்கள், இராணுவத்தினர் ஆதியோர் இவ்வணியில் இடம்பெறுகின்றனர். பதினேராம் நூற்ருண்டில் உண்டானது மால்டாவின் கௌரவ அணி. விசுவாசிகட்கும் சந்நியாசர்கட்கும் உரியது.

அம்மா: பட்டங்களும் நன்ருகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாத் தகுதிகட்கும் கொடுப்பார்கள்போலிருக்கிறது.

அகஸ்ரீன்: ஆமாம். அடுத்துவருகிறது. திருச்சபைக்காகவும் பாப்பரசருக்காகவும்என்ற கௌரவம். 1888-ல் 13-ம் சிங்கராய பாப்பரசரால் ஏற்படுத்தப்பட்டது. அந்தப் பாப்புவின் குருத்துவ பொன்யூபிலி விழாவுக்கு அருந்தொண்டாற்றிய பிரமுகர்கட்கு மேற்படி பாப்பரசர் இப்பட்டத்தை வழங்கினர். பாப்புமாரும் இதை அங்கீகரித்துப் பாப்பானவருக்காகவும் திருச்சபைக்காகவும் நற்சேவையாற்றியோரைக் கௌரவித்துவருகின்றனர். இதற்கெனவழங்கும் பதக்கம் தங்கத்தால் ஆனது. 13-ம் சிங்கராயரின் உருவம் பொறிக்கப்பட்டுளது. அதைச்சுற்றி அப்பாப்பரசரின் குடும்பச்சின்னமான லீலிமலர்கள் அலங்கரிக்கின்றன. 1832-ல் பதினேராம் கிரகோரியாரால் நற்தகுதிப் பட்டம் உண்டாக்கப்பட்டது. வெள்ளிப் பதக்கத்தில் ஆளும்பாப்பரசரின் உருவம் பொறிக்கப்பட்டுளது.

அம்மா: கெட்டிக்காரனைப்பாராட்டத்தான் வேண்டும். அது மற்றவர்கட்கும் முன்மாதிரியாகும்.

அப்பா: தொண்டாற்றுகிறவர்கள் பெருகவேண்டும். இன்றைய நிலையில் கத்தோலிக்க திருச்சபையில் போதுமான குருமார் இல்லை. எனவே அதைச்சமாளிக்க விசுவாசிகளிலிருந்துபலர் குருமாரின் சாதாரணசேவைகளைப் பகிர்ந்துகொள்ளல் வேண்டும்.

பெரியண்ணு: அமெரிக்காவில் இயூஜின் ரூபேட் ஜிம்மர்ஸ் என்ற யேசுசபைக்குரவர் இவ்வித இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளார். நல்ல வருமானமுள்ள தங்கள் தொழில்களை உதறித்தள்ளிவிட்டு ஆறு கத்தோலிக்க பிரமுகர்கள், இல்லற அப்போஸ்தலிக்க தொண்டில் சேர்ந்து கடந்த ஒருவருடகாலமாக ஜிம்மர்ஸ் அடிகளின் தலைமையில் கத்தோலிக்கமத கோட்பாடுகள், வேதபோதகங்கள், திருச்சபையின் போதனைகள், கொள்கைகள், இலட்சியங்கள் என்பவற்றில் திறமையான பயிற்சியைப்பெற்றுள்ளனர். அமெரிக்க கத்தோலிக்க பல்கலைக்கழகங்களில் மதபோதகர்களாகக் கடமையாற்றும் திறமைமிக்க 27 பேராசிரியர்கள் இந்த இல்லற அப்போஸ்தலர்கட்குப் பயிற்சியளித்தனர். யேசுசபையை நிறுவிய புனிதர் இக்னேசியஸ் லொயலாவின் ஞான ஒடுக்கப் பயிற்சி வழிகளில் இவர்கள் 3 வாரங்களைக்கழிப்பதற்காக அண்மையில் சென்பிரான்சிஸ்கோவிலுள்ள சர்வகலாசாலைக்குச் சென்றனர். ஆடி மாதம் முதல்தேதியில் இவ்வப்போஸ்தலர்கள் கிராமந்தோறும் சென்று கத்தோலிக்கர்கட்கும் கத்தோலிக்கர் அல்லாதாருக்கும் சத்தியமறையின் தத்துவங்களைப்போதிப்பர். நல்வழியில் நடத்துகாட்டுவர். இவர்கட்கு மாதமொன்றுக்குச் சுமார் 500 டாலர்களை வேதனமாகக்கொடுத்து அன்னாரின் சேவையைப் பெறக் கலிபோர்ணியா, அரிஜோனு, நெவாடா இராச்சியங்களிலுள்ள பல மேற்றிராணிமாரும் முன்வந்துள்ளனர். இவ்விதம் சிறந்த வேதனமளிப்பதால் அப்போஸ்தலர்கள் தங்கள் குடும்ப சவரட்சணையைச் செவ்வனே நடாத்திக்கொண்டு வேதபோதக அலுவல்களில் திருப்தியாய் ஈடுபடலாமல்லவா?

இயூஜின்: ஜிம்மர்ஸ் சுவாமிகளின் சேவை பாராட்டுதற்குரியது. எனினும் இங்கும் அங்ஙனம் ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு எங்கள் மேற்றிராணிமாருக்குப் பொருளாதாரம் போதியதல்ல. இருப்பினும் இவ்வழியை இலக்காகக்கொண்டு வேறுவழிகளைக் கையாளலாம்.

அகஸ்ரீன்: இப்போது யாழ்ப்பாணத்தில் இல்லற அப்போஸ்தல இயக்கமொன்று சிறுக இயங்கிவருகிறது. இதற்கு ஆசிரியர்களும் அரசாங்கஊழியரும் மற்றும் கத்தோலிக்க பிரமுகர்களும் ஆதரவுகொடுத்தல்வேண்டும்.

பெரியண்ணு: கத்தோலிக்க குருமாரின் சேவையை அத்தான் கூறினர். ஆர்ஜென்ரீனுவில் புனிதசின்னப்பரின் புத்திரிகள் சபையைச் சேர்ந்த கன்னியர்கள் திரைப்படங்களை விநியோகிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அன்ரன்: சினிமாத் தொழிலில் கன்னியர்களா?

பெரியண்ணு: ஆம். ஆர்ஜென்ரீனு தேசத்தில் திரையிடுவதற்காக நல்ல திரைப்படங்களை விநியோக உரிமையுடன் விலைக்கும்பெற்றுக்கொள்கின்றனர். பின்னர் அப்படச்சுருள்களில் சன்மார்க்கத்துக்கொவ்வாத பகுதிகளை வெட்டித்தள்ளிவிட்டுப் படமாளிகைகட்கு இத்திரைப்படங்களை விநியோகிக்கின்றனர். இப்போது விநியோகத்துக்காக 280 திரைப்படங்கள் அவர்களிடம் உண்டாம்.

அப்பா: திரைப்படம் பாராதே என மக்களைக்கட்டுப்படுத்த முடியாது. அதில் உள்ள ஆபாசங்களை அகற்றிவிட்டால் தீமைகள் எவ்வளவோ அகலும்.

பெரியண்ணு: மெச்சிக்கோ, கொலம்பியா, பிறேசில் போன்ற நாடுகளும் இந்த முறையைப்பின்பற்ற ஆலோசிப்பதாகத் தெரிகிறது. இந்தக்கன்னியர்கள் கவர்ச்சிகரமான கத்தோலிக்க சஞ்சிகைகள், புத்தகங்கள் வெளியிடும் தொண்டிலும் ஈடுபடுகிறார்களாம்.

இயூஜின்: இத்தாலியில் ஒரு முஸ்லிம் மாது தன்பிள்ளைகள் கத்தோலிக்க மதத்தில் சேர்வதற்காக வேதசத்தியங்களை நன்கு கற்பித்தனுப்பினுளாம். இக்குழந்தைகட்கு ஞானுபதேசத்தைக்கற்பிக்கவேண்டிய சிரமத்தை எங்களுக்கு விடவில்லை அந்த முஸ்லிம்தாய் எனப் பங்குக்குரவர் கூறினுராம்.

அம்மா: அந்தப்பெண்ணுககு என்னுடைய பாராட்டுகள். அவளும்விரைவில் எங்கள் மதத்தில் சேர்வாள்.

இயூஜின்: இத்தாலியில் வெரோனு என்ற மேற்றிராசனத்தில் இச்சம்பவம் நடந்தது. அப்பெண்ணின் கணவர் இத்தாலியர். வெரோனுவின் மேற்றிராணியார் மூன்று பிள்ளைகட்கும் ஞானஸ்நானம்கொடுத்தபின் அப்பெண்ணைநோக்கி, நீரும் உமது ஆத்துமத்தில் கிறிஸ்துவைக் கொண்டுள்ளீர் எனக்கூறினுராம்.

பெரியண்ணு: கடந்தவாரம் ஐ. நா. சபையின் அகதிகள்பாதுகாப்பியக்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு தெரிவித்த புள்ளிவிபரப்படி வத்திக்கான் இராச்சியம் அகதிகள் நிவாரணநிதிக்காக 22லட்சம் ரூபாய்களை உதவியுள்ளதாம். 76 தேசங்களிடம் அகதிகள் நிவாரண ஞாபகார்த்த தபால்தலைகள் விற்பனைக்காகக் கொடுக்கப்பட்டது. இதுவரை இத்தேசங்கள் தபால்தலைகளின் விற்பனையாக 45லட்சம் ரூபாய்களைப் பாதுகாப்பியக்கத்துக்குக் கொடுத்துள்ளன. வத்திக்கான் இராச்சியமே மிகக்கூடுதலான தொகையை, அத்துடன் முழுலாபத்தை உதவியிருக்கின்றது. மற்றைய தேசங்கள் இலாபத்தின் ஒருபகுதியைத் தங்கள்நாட்டு அகதிகட்காக ஒதுக்கிவிட்டனவாம்.

அப்பா: நேரமாகிறது. எங்கள் அன்ரனுக்கும் கார்மெலாவுக்கும்

(தொடர்ச்சி 2-ம்பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday June 24-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org